போஸ்டு ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௩. } விரோதகிருது வருஷ தைமீ { பகுதி ௧௦.

பொருளடக்கம்.

சுதேசாபிமானம்—பத்திராதிபர்.		௧௦௩
பஞ்சபூதம்—C. S. முத்துசாமி ஐயர்		௧௦௪
நட்பு—ப. வி. சுப்பய்யன்.		௧௦௮
முத்ரா ராக்ஷஸம்—R. வேதநாராயண சர்மா B. A. B. L.		௧௧௦
மாலினீ மாதவம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L.		௧௧௨
சரீரசுகம்—தெ. அரு. சித. இராமநாதன்செட்டியார்.		௧௧௧
தஞ்சைப் பெரியகோவில்—காந்தை முருகேசன்.		௧௨௨
ஸ்ரீமத். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் விவாகமும் பிரசங்கங்களும்	பத்திராதிபர்	௧௨௬
காலஞ்சென்ற ஸ்ரீமாந். பெர். பாண்டித்துரை தேவரவர்கள்	ம. கோபாலகிருஷ்ணையர்	௧௨௭
மடாதிபதிகளும பொதுஜனங்களும்—M. சின்னையச்செட்டியார்		௧௩௦
கண்டனூர் தனவைசிய சபை—கண்டனூர்வாசி.		௧௩௨
புத்தகக்குறிப்பு—பத்திராதிபர்.		௧௩௩
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்		௧௩௪

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர்,
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.

மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1. தபாற்கூலி வேறு, தனிப்பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபார விளம்பரம்.

இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது,

ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகம்

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பசுந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தமகளுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால் வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பப்படு மென்பது திண்ணம்.

42 இஞ்சு அகலம் 8 கஜம் நீளம்	புடவை 1க்கு விலை. ரூ 25 முதல் ரூ 50 வரை.
42 இஞ்சு அகலம் 20 இஞ்சு நீளம்	ரவிக்கை 1-க்கு விலை. ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம். எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்) .

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. *Benares City.*

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௧. } விரோதிகிருது ௵ தைமீ } பகுதி ௧0.

சுதேசாபிமானம்.

(204-ம் பக்கத் தொடர்ச்சி.)

அசகாய சூரனாகிய தெமிஸ்டாகிளிஸ் என்பவன் ஆதன்ஸ் நகரச் சேனைகட்கெல்லாம் அதிபனாக இருந்தான். அவன் ஓர் சிறந்த போர்வீரனாயினும் நீதி இல்லாத நிபுணனே. ஒருநாள் அவன் ஓர் மகாஜன சபை கூட்டி, ஆதன்ஸை அதி உன்னத பதவிக்குக் கொண்டுவரக் கூடிய சூழ்ச்சி ஒன்றைத் தான் கண்டுபிடித்திருக்கிறதாகவும், அது அதி ரகசியமாய் நிறைவேறவேண்டியிருப்பதால் அதன் விவரம் யாவருக்கும் அறிவிக்கக் கூடாமலிருக்கிறதென்றும், நம்பிக்கையுள்ள ஒருவனைத் தம் பிரதிநிதியாக அவர்கள் அனுப்பினால், அவனிடம் அதனை அறிவித்து அவனது ஆலோசனைக் கிணங்கத் தான் நடந்துகொள்வதாகவும் தெரிவித்துக்கொண்டான். இவன் கோரிக்கைப் பிரகாரமே ஆதென்ஸ் முழுதும், தருமசீலனும் ஸத்திய ஸந்தனுமான அரிஸ்டைடிஸ் என்பவனையே தம் பிரதிநிதியாக ஏகோபித்துத் தெரிந்தெடுத்தது. தெமிஸ்டாகிளிஸ், அரிஸ்டாகிளிஸை ஓர் தனி இடத்திற்கு அழைத்துச்சென்று, ஆதன்ஸுக்கு அயலில் உள்ளதும், அதனினும் ஒரு சிறிதும் பெருமையிலும் அதிகாரத்திலும் தாழாததுமான, லஸிடிமோனியா (ஸ்பார்டா)வுக்கும் இதர நாடுகளுக்கும் சொந்தமான சண்டைக் கப்பல்கள் பாதுகாப்பு யாதுமின்றி அச்சமயம் இருப்பதாகவும், அதனைத் திடீரென்று தாக்கித் தீவைத்துக் கொளுத்திவிட்டால் ஆதன்ஸினும் வல்லரசு ஏதுமிராமல் போய்விடும் என்றும் கூறினான். இதனைச் செவியுற்ற

தும் அரிஸ்டைடிஸ் உடனே மகாஜன சபைக்கு வந்து "தெமிஸ்டா கிளிஸ் சொல்வதைக் காட்டிலும் லாபகரமானது பிறிதொன்று மில்லை. ஆயினும் அதனினும் அதி அக்கிரமமானதும் இல்லை." என்று இவ்வளவே சொன்னான். உடனே வேறு வார்த்தை ஏதும் பேசாமல், விஷயம் இன்னது என்று கூட அறிந்துகொள்ள ஆவல் கொள்ளாதவராய், மகாஜன சபையோர், ஒருவரைப்போல யாவரும் தெமிஸ்டாகிளிஸை ஏதும் செய்யவேண்டா மென்று தடுத்தே விட்டார்கள். அபிப்பிராய பேதம் ஏதுமன்றி ஒருவர்க்குத் தோன்றிய படியே யாவர்க்கும் தோன்றியது எவ்வளவு பாராட்டத் தககது! முற்றத் துறந்த முனிவர்களைத் தவிர யாரே இவ்வாறு செய்ய உடன்படுவர்? ஒரு தேசத்தில் கோடியில் ஒருவர் ஞானிகளாயிருத்தல் காண்பதரிது. தேசத்தார் யாவருமே ஞானிகளா யிருந்தது என்ன ஆச்சரியம் பாருங்கள்!

ஆ! ஆ!! இத்தகைய நியாய புத்தி இருந்ததால் அல்லவா உலகை யெல்லாம் ஜயித்துக் கீழ்ப்படுத்தியதும் அநியாயப் போர் புரிந்ததுமான பாரஸீக (Persia) மும் அதை ஜயிக்க முடியாமல் பன்முறை தோற்று முடிவில் பயந்து ஓடியே விட்டது?

"கோதிலா மனத்தின் மேலதா வலிமை கொண்டமார்க் கவசம் யாதுளது?
நீதியாற் சண்டை புரிபவன் வலினுமா நிறைவுறக் கவச மொயம் பினனும்.
நிதலாம் அநீத நெறியேனும் கனவகம நிண்டிய மனக்கரி யுளான், தன்
மீதிலே உருந்துக் கவசமே போர்த்தும் வேற்றுடமீ புடையனு குவனே."
என்ற புலவர் வாக்குப் பொய்யின்றே?

தம்முடைய தேசத்துக் கைத்தொழிற் சாலைகளும் வியாபாரமும் விருத்தி அடைவது, அந்நியநாட்டுக் கைத்தொழிற் சாலைகளையும் வியாபாரத்தையும் அழிப்பதனாலென்று தப்பெண்ணம் கொள்வோர்க்கும் இது சிறந்த புத்திபுகட்டும் என்பதற் கையமில்லை, நிற்க.

"வண்மையபாற் கல்விபால் மாபலத்தால் ஆள்வினையால் உண்மையாற் பாராளு முரிமையால்" அதி பிரக்ஞாதியடைந்த, கிரீஸ் தேச முழுமையுமே காககுந் தொழில் பூண்ட இதே ஆதென்ஸ், பெரிக்கிளிஸ் என்பவன் ஆட்சிக்குப் பின்னர் எய்திய கேட்டை என்னென்பேம்! இலங்காபுரியை இலங்கா புரியாக்கவும் அத்திப்புரி

அத்தி புரியவும் தோன்றிய மஹோதரனையும் சகுனியையும் போல அல்கிபியாடிஸ் முதலிய துன்மந்திரிகளைப் பெறும்படியான துர்ப்பாக்கியம் ஆதென்ஸுக்கு கி. மு 514ல் லபித்தது. ஆதென்ஸுக்குச் சமீபத்தில் மீலாஸ் என்ற ஒரு சிறு தீவு சகல சுதந்தரங்களுடனும் அது தோன்றிய காலமுதல் இருந்து வந்தது. இது ஆதெனஸுக்கு எந்த விதத்திலும் கட்டுப்பட்டதன்று. அதற்குக் கனவிலும் தீங்கு நினைத்தது மன்று. அவ்வாறு வெகுகாலமாக இருந்து வந்தும், அது மட்டும் கிரீஸ் தேசத்தில் சகல சுதந்தரங்களுடனும் கூடிய ஓர் சுயாதீனமுள்ள நாடாக வாழ்வதைக் காண ஆதென்ஸுக்குச் சகிக்கவில்லை. "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" என்ற கதையில, ஓநாய் ஓர் முற்றும் பொருந்தாக் காரணத்தைக் கூறியாவது ஆதாரவற்ற ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்றது. ஆதென்ஸோ, அப்பேர்ப்பட்ட காரணங்கூட ஏதும் கூற முடியாமல், திடீரென்று ஒரு பெருஞ் சேனையை அனுப்பி மீலாஸ் என்ற அச் சிறு தீவை வளைந்துகொண்டு அதில் உள்ளார் யாவரையும் தமக்குக் கீழ்ப்படியுமாறு வற்புறுத்தினது. மீலாஸில் உள்ளவர்கள் ஆதென்ஸ் நகரத்தார்க்கு எவ்வளவோ நீதி எடுத்துரைத்து அவர்கள் செய்வது அக்கிரமம் என்று நன்கு விளக்கினார்கள். ஆயினும் ஆதென்ஸ் அவைகளை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோலாக்கி, "நீதி என்பது கையாலாகாதவன் தன்னைத் தப்பித்துக்கொள்ளும பொருட்டுப் பேசுகிற பேச்சு" என்றும், "ஆற்றுவரேற் றோன் வலியாற் கொள்ளுவதும் ஆற்றரேல் தோற்பதாவும் வேந்தர்க்குச் சொல்லியதே" என்றும், இன்னணம் பலகூறி பராக்கிரமமிகுத்த தன் சொல்லுக்கு உடனே கீழ்ப்படியாததுபோனதே மீலாஸ்செய்த பெருங் குற்றமெனறு கண்டித்துரைத்து அவ்வூரில் உள்ள ஆடவர்களெல்லாவரையும் ஒருவர் கூட இல்லாமல் கொன்றதுடன், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளையும் அடிமைகளாக விற்றுவிட்டார்கள். ஐயோ! "எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்" என்பது பொய்யோ? எல்லா வல்லமையும் இருந்தும், இது, தற்போழிவும், சன்மார்க்க நியாய விரோதமுமாய் நடந்துகொண்ட இச்செய்கையினாலேயே இதுகடந்த சின்னாட்களுக்கெல்லாம், நயவஞ்சக மிகுந்த ஸ்பார்டா கையில் அகப்பட்டு நாயும் படாத பாடுபட்டுச் சீர்குலைந்து அழிந்துவிட்டது.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

பஞ்சபூதம்.

(293-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்போது வாயுவைப்பற்றி ஆராய்வோமாக:—

இப்பூமியைச்சூழ்ந்திருக்கும் வாயுவானது 100-ல் 21 பங்கு பிராணவாயுவென்றும் 79 பங்கு உப்புவாயுவென்றும் மிகச்சிறு பான்மை கரியமலவாயுவு வென்றும் சொல்வார்கள். பிராணவாயு மனிதர் விலங்கு முதலியவற்றிற்கு ஆதாரமாகிப்பின் கரியமலவாயுவாக வெளிப்பட்டு புல், பூண்டு, மரம் முதலிய வற்றிற்கு உணவாகிறது. அவைகள் கரியை உட்கொண்டு சுத்தப்பிராணவாயுவைத் திருப்பித்தருகின்றன. இவ்வித பரிவர்த்தனையால் பிராணவாயு என்றும் போல் சுத்தியாய் நின்று உயிரக் காதாரமாகும். உப்புவாயுவானது பிராணவாயுவின் வேகத்தைத் தணியா நிற்கும். தனிப் பிராணவாயுவை உட்கொண்டால் நிமிடத்தில் தேகம் எரிந்து சாம்பலாகும். சிறுகச்சிறுக பிராணவாயுவை இழுத்து அதை நன்மை பயக்குமாறு வசப்படுத்துவதுதான் "பிராணாயாமம்" எனபர். பிராணாயாமம் விட்ட மனோலயம் இன்றாகலால், வாயுவே முந்தி சாதனம் என்பர். இவ்வாறு பிராணவாயு மயமான தேகம் ஞானதேகமாம. அப்படிப்பட்ட தேகத்தினாலல்லவோ சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூட்டோடு கைலாசஞ் சென்றது. பிராணவாயுவை நிறைய இழுக்கவும் விடவும் பழகினாலும் ஆயுள், ஆரோக்கியம், திடகாத்திர தேகம், மனக்கிளர்ச்சி முதலியன எவரும் பெறுவர்.

நீரைப்போலவே, வாயுவையும் அமுக்கி சிறிதாக்க இயலாது. ஆனால் நீரைப்போலல்லாது ப்ரவுந்தன்மை சிறிது உண்டு. வாயு உதவியால் Air pump, Syphon, Water pump, Artisian wells முதலியன செய்யப்பட்டிருக்கின்றன நிற்க.

ஆகாயமானது மற்றைய 5 பூதங்களுக்கும் தாயகமாய், தான் சலிப்பின்றி நிறைவாய் நிற்கும். அதை ஒலியால் அறிவதென்று முன்னமே சொல்லப்பட்டிருப்பதால் அவ்வொலியே உலக காரணமாகிய நாத தத்துவமென்றாகும். அதினால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. எல்லாம வல்ல தாம் அது ஒருவன உள்ளத்தில் நின்று உதித்தலால்தனனிடத்தன்றி வேறாய்க்காணும் இயல்புடைத்தன்று. மேற்கித்தியாரும், ஓவிதமாய், ஆகாயம் இவ்வுலக பரிமாணம்போல் நிலவலில, அந்த அளவு ஆகாயத்திற்கு, நிறை ஏறக்குறைய 200 பவுண்டு என்கிறார்கள்.

இவ்வைமபூதங்களில் ஒன்றைவிட ஒன்று அதிக பலமுடைய தாகக் காணப்படும். மண்ணைவிட சலம அதன் ஓட்டத்தால் பலமுடையது. கண்டவற்றை எல்லாம் சுட்டெரிப்பதால் நெருப்பு சலத்தைவிட பலமுடையதாகும். வாயுவும் வாயுதன்மையடைந்த நீராவியின் பலம அதிகமே. அவ்வாயுவைவிட ஆகாயத்திற்கு

அதிக பலம் உண்டென்பது அறியற்பாலதல்ல. ஆனால், அமெரிக்காவில் "Mr Jhon Worrel Kelly" என்றவர் கண்டுபிடித்த ஆகாய (Ether) யந்திரம் இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்ட எவ்வித யந்திரங்களிலும் மேம்பட்ட பலமுடையது. அதனால் "திரிபுரசம்ஹாரம்" போல் நொடியில் உலகத்தையும் அழிக்கலாமாம். அது பயன்பட்டு வெளிவாராது நிற்பதற்குக் காரணம் அவ்வாகாயத்தைத் தன்னுட்கண்டு அதைத்தன் மனத்தின்வழியே செலுத்தும் பேரறிவுடைய அச்சாஸ்திரிக்கு மாத்திரம் இயக்குவதன்றி ஏனையோர்க்கு இயக்க முடியாமையே.

ஆகாயம் முதலான ஐந்து பூதங்களும் இவ்வாறு வெளியில் காணப்படுவதுபோல் நம்மிடத்திலும் ஐம்பொறிகளினிடத்து பயன்படுதலுண்டு. அவ்வைம் பொறிகளையும் அறிந்து "அவற்றையான் இயக்காவிட்டால் தானே இயங்கா, அதனால் அவை சடம்" எனவுணர்ந்து நிற்பவன் ஆன்மா என்று தன்னை அவற்றின் வேறாகப்பிரித்துக்காண்பவனே அறிவுடையான். பஞ்சபூதத்தின் பலம் படிப்படியே ஏறக்கண்டோம். அவ்வெளிப்பூதங்களிலும் மிகவன்மையுடையது நம்முள்ளே காணப்படும் ஐம்பொறிகளே. அவைகளை அடக்கும அறிவுடையான் எவனோ அவனே பலவான். இது கருதியன்றோ "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலுங்கரி" என்றார் நம் நாயனாரும். அவ்வண்ணம் ஒருவன் ஐம்பொறியடக்கும் திறம் பெற்றாலும் "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லா தவர்க்கு" என்றார் அவர்.

ஆதலால் ஐம்பூதச் சேர்க்கையாகிய இவ்யாக்கை கிடைத்தது "உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லாம் திடம்பட ஈசனைத் தேடு" என்ற ஒளவையார் வாக்கைப்பின் தொடரல்வேண்டுமென்றல்லவா?

"மானுடப் பிறந்தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலு மூமர் ஒன்றையு முணரா ரந்தோ"

என்று மெய்யுணர்வடைதலே நமது மேம்பட்டகடமையாகும்.

ஆதலால் பஞ்சபூதங்களை யாட்டி வைப்பவனாகிய பூதநாதனை மனதிற்கொண்டு அவனது கருணையை வியந்து அவனை வழிபடுவோமாக.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என சொல்லி வாழ்த்துவனே."

C. S. முத்துஸாமி ஐயர்.

நட்பு.

நட்பாவது ஒத்த அன்பினராகிய இருவர் தம்முள் மாறுபாடின்றி, ஒற்றித்து நிற்றலாம். இது, இன்றியமையாச சிறப்புடையதாய் நின்று, மிக்க வலுவைக் கொடுப்பதாம். ஒரு நூலானது தான் றனித்து நின்றுழி, வலியற்றொருவன் எளிதில் அறுக்க அறுபடத்தக்கதாயும், அந்நூலே பல நூல்களுடன் இயைந்து ஓர் கயிறாய் நிற்புழி, வல்லார் பலர்கூடி யறுக்க அறுபடாததாயும், நிற்கின்றதுபோலவே, நாம் தனித்திருப்பின் ஓர் எளியனுக்கு தோற்போம். நல்லார் பலருடன் நட்புக்கொண்டவிடத்து வலியார் வந்து எதிர்ப்பினும் வெற்றி யடைவோமென்பதிற் சற்றேனும் ஐயமில்லை.

ஒருவரோடு நட்புச் செய்யப் புக்கவிடத்து, அவரது குணம் செயல் முதலியன எல்லாவற்றையும் ஆராய்ந்து நற்குணம் நற்செயல் ஆகிய இவைகள் அதிகப்பட்டு நின்றவிடத்து நட்டல் வேண்டும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து நட்புச்செய்யாவழி அந்நட்பு, தான் இறந்து படத்தக்க துன்பத்தை விளைக்கும்.

குளத்தில் நீர் வற்றிய ஞான்று, அக்குளத்தில நின் றகன்றும் நீர் நிரம்பிய ஞான்று அவண் வந்து கூடியும் நிற்கும் நீர்வாழ் பறவை போல், செல்வம் நிரம்பிய ஞான்று பலவாறு உறவுமுறை கூறி நெருங்கியுண்டும், அது தீர்ந்துழி தன்னையங்கருதி யகன்றும் செல்வோரா நட்புக்குரியாரல்லர். அன்னாரோடு நட்புசசெய்பின், அவர்க்கு ஏறபடுந் துன்பங்களெல்லாம் தமக்கும் நேரும். இதபுறறியே "மனத்தான் மருயிலரேனும் தாஞ் சோகத இனத்தா னிகழப்படுவா." எனவும், "நல்வினைக்கமல்லது அல்லற்படுத்தும்." எனவும், கூறியுள்ளார்கள்.

பூவுடன் சேர்ந்த நாரும், தங்கத்துடன் சேர்ந்த அரக்கும், எங்ஙனந் தள்ளப்படாது யாவரானும் விரும்பி ஏற்றுக்கொள்ளப் படுகிறதோ, அங்ஙனமே, இழிந்தோராயினும், நல்லோருடன் கூடின், உயர்வடையலாம்.

நல்லோர் உறவு, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிற மூன்றாம்பிறைச் சந்திரன் போலவும், நனியிலின்று தின்னப்பட்டு

வருகிற கரும்பின் சுவைபோலவும், பிற்பகலில் வளர்ந்துகொண்டே வருகிற நிழலைப்போலவும், மென்மேலும் பெருகிக்கொண்டேவரும். இன்னணமாய நல்லோர், அறியாமையினாலேனும், உரிமைபற்றியேனும், துன்பு இயற்றியவிடத்து, அதனை அறியாமையாற் செய்தாரென்றேனும், அல்லது விதிவசத்தால் வரவேண்டியிருந்த துன்பம் இவர்கள் மூலமாக வந்ததென்றேனும் உட்கொண்டு, சமாதானமடைதல் வேண்டும். சில சமயங்களில் தன் கையே தன் கண்ணைக் குற்றிவிடுகின்றது. அதற்காகத் தன் கையைக் களைவாருண்டோ? "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை." இதுபற்றியே "குணநாடிக் குற்றமு நாடியவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்றார் நாயனாரும். பேயோடுபழகினும் பின் பிரிதல் இன்னாதாகையால், நட்டபின் பிரிதல் கூடாது. பலபேருடன் பகைத்தாலும் பகைக்கலாம். நல்லோர் உறவு விடலாகாது. விடிற்கேடு நேரும். இதனை

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கைவிடல்" என்னுந் திருக்குறளான் அறிக.

பிறர் செய்யுங் குற்றங்களைப் பொறுக்குங் குணமுடையான் யாவனோ அவனை அறிந்து சிநேகித்தல் மிக நன்மையைச் செய்யும். இதுபற்றியே, "யானை யனைவர் நண்போரீஇ நாயனையார் கேண்மை கெழீஇக்கொளல் வேண்டும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார். ஆன்றோர் மனவேறுபட்டால் சிறிது பிரியினும், நீர்ப்பிளவுபோல் உடனே கூடுவர். மூர்க்கரெனில், கற்பிளவொப்பக் கூடார்.

விபீஷணன் தன் குலமெல்லாம் மடியவும், தான் நிலைபெற்று நின்று ராஜ்யாபிஷேகம் செய்வித்துக் கொள்ள நேர்ந்தது ஸ்ரீ ராமபிரானைச் சேர்ந்ததனாலன்றோ? நல்லோருடன் நட்புக்கொண்டவன் எப்பொழுதும் நன்மையடைவன். தீயோருடன் நட்புக்கொண்டவன் ஒருக்காலும், நன்மையடையான். "ஊதிய மென்ப தொருவர்க்குப் பேதையார் கேண்மையொரீஇ விடல்" என்னுந் திருக்குறளான் பேதையாருடன் நட்புக்கொள்ளாமையே பெருத்த லாபமாகும் என்றறிக.

ஆகலால் இருமைக்கும் நன்மையை யுண்டுபண்ணும் நல்லாருடன் கூடி நாம் நீடூழி வாழுமாறு கடவுள் அநுக்கிரகிப்பாராக.

ப. கி. சுப்பராயன்.

முத்ரா ராக்ஷஸம்.

(296-ம் பக்கத் தொடர்ச்சி).

சாணக்யன்:—(இதைக்கேட்டு தனக்குள்) "யாரோ ஒருவன் சந்திரகுப்த மஹாராஜனிட மபிமானமற்றவர்களைத் தனக்குத் தெரியும் என்று குறிப்பிக்கின்றான்."

சிஷ்யன்:—"மூடா! என் இவ்வாறு கண்டபடி பிதற்றுகின்றாய்?"

சாரணன்:—"தப் ப்ராஹ்மணரே! எல்லாம் சரியானபடி தான் சொல்லுகின்றேன்."

சிஷ்யன்:—"சரியானபடி என்ன சொல்லப் போகின்றாய்?"

சாரணன்:—"அதைக் கேட்கக்கூடியவர்கள் கேட்டால்—"

சிஷ்யன்:—"சரி சரி! தாராளமாய் உள்ளேபோ. கேட்கக் கூடியவரும் அறியக்கூடியவரும் இருக்கிறார். அவரிடத்தில்—"

சாரணன்:—"இதோ பிரவேசிக்கிறேன்" (பிரவேசித்துச் சாணக்யனருகில் சென்று) "ஆர்ய! நமஸ்கரிக்கின்றேன்."

சாணக்யன்:—(பார்த்துவிட்டுத் தனக்குள்) "ஓஹோ! ஜனங்களின் அபிப்பிராயங்களை அறிந்து வருமாறு அனுப்பப்பட்ட 'நிபுணகன்' அல்லவா இவன்? (வெளிப்படையாய்) நண்ப! வா! உட்கார்!"

சாரணன்:—"தேவரீர் உத்தரவு!" (தரையில் உட்காருகின்றான்.)

சாணக்யன்:—"நண்ப! உனக்கேற்பட்ட காரியத்தின் விருத்தாந்தங்களைத் தெளிவாய்க் கூறு. ஜனங்கள் சந்திரகுப்தனிடம் அபிமானமுடையவர்களா யிருக்கின்றார்களா?"

சாரணன்:—"ஆமாம! அபிமானக்குறைவுக்கு யாதொரு காரணமுமில்லாமல் தேவரீர் செய்திருப்பதால், நற்பெயர்வாய்ந்த நமது சந்த்ரகுப்த மஹாராஜனிடம் ஸமஸ்த ஜனங்களும் விசேஷ பக்தியுடையவர்களா யிருக்கின்றார்கள். ஆனால், இந்நகரில், மந்திரி ராக்ஷஸனிடம் முதல் முதல் அபிமானமும பகுமானமு முடைய

உ

மூவர் மாத்திரம், சந்த்ரகுப்த மஹாராஜனுடைய உயர்பதவியைச் சகியாதவர்கள்"

சாணக்யன்:—(கோபத்துடன்) "என்! இப்படிச்சொல்வேன்! தாங்கள் உயிருடன் இருக்கச் சகியாதவர்கள் என்று—சரி! நண்ப! அவர்கள் பெயர் என்ன?"

சாரணன்:—"ஹா! அவர்கள் பெயரை விசாரியாமல் தேவரீரிடம் சொல்ல வருவேனா?"

சாணக்யன்.—"சரி! சொல்லு! கேட்போம்."

சாரணன்:—"தேவரீர் கவனிக்கவேண்டும். முதலாவது—தேவரீருடைய சத்ரு பக்ஷத்தில் மிக்க அபிமானமாயிருக்கின்ற 'ஜீவஸித்தி' என்ற க்ஷமண ஸந்யாஸி."

சாணக்யன்:—(ஸந்தோஷத்துடன் தனக்குள்) "ஓஹோ இக்ஷமணன் நமது சத்ரு பக்கத்திலா அபிமானமாயிருக்கின்றான்? சரி! இருக்கட்டும்! பிறகு—"

சாரணன்:—"ஜீவஸித்தி என்பவன் தான் மந்திரிராக்ஷஸன் ஏவுதலின் பேரில், பர்வதேசுவர மஹாராஜனைக்கொல்ல விஷ கன்னியை யனுப்பினவன்"

சாணக்யன்:—(தனக்குள்) "இந்த ஜீவஸித்தியும் நமது சாரணன் தான். (வெளிப்படையாய்) சரி! இன்னொருவன் யார்?"

சாரணன்:—"ஆர்ய! மற்றவன், மந்திரி ராக்ஷஸனுடைய அத்யந்த ஸிநேகிதனை 'சகடதாஸ'னென்னும் ஓர் காயஸ்தன்."

சாணக்யன்:—(சிரித்துக்கொண்டு தனக்குள்) "ஓ! காயஸ்தன் எல்லாம் நமக்கு த்ருணமாத்ரம். ஆயினும் அற்பப்பகைவனாயினும் அசட்டை செய்யலாகாது. அவன் விஷயத்தில் ஸிநேகித வேஷத்துடன் நமது வித்தார்த்திகனை ப்ரயோகித்திருக்கின்றோம். (வெளிப்படையாய், சரி! மூன்றாவான் யார்? சொல் கேட்போம்."

(இன்னும் வரும்.)

R. வேதநாராயண சர்மா, B.A., B.L.

மாலினீ மாதவம்.

அத்தியாயம் 9

(291-ம்பக்கத் தொடர்ச்சி.)

மாறு காட்சிகள்.

இந்நிலைமையில் மூன்று தினங்கள் சென்றன. நமது மணிபுரம் மஹாராஜாவின் விவாஹத்துக்கு வேண்டிய முயற்சிகள் வெகு விமரிசையாயும், ஸம்ப்ரமமாயும் நடந்து வருகின்றன. பட்டணத்தில் அநேக விடங்களில் சிங்காரமான பந்தல்களாலும், வீதிகள் எல்லாம் விதம்விதமான தோரணங்களாலும் பூமாலைகளாலும், பதாகைகளாலும், ஆலவட்டங்களாலும், தீபஸ்தம்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

புறதேசத்தினின்றும் இவ்விவாஹ மஹோத்ஸவத்தைப் பார்க்க வரும் ஜமீன்தார்களும், ஜில்லா அதிகாரிகளும், துரைகளும், ப்ரபுக்களும் தங்கும் பொருட்டு ஆங்காங்கு தனித்தனி 'ஜாகாக்'கள் அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி நிர்மிக்கப்பட்டிருந்தன.

சென்னை 'ஸிம்ஸன் கம்பெனி' யாரிடமிருந்து நவீன நாகரீகத்துக்கிணங்க(up to date fashion) வெகு அழகானதும்,—உயர்ந்த வில் வைத்ததும், மேகவர்ண வெல்வெட்டுகளாலும், ஜரிகை ஓரங் (borders) களாலும் விதம் விதமான மலர்கள் கொடிகளாலும், அலங்கரிக்கப்பட்டதும், முத்துக்கள் ஜாலர்கள் ரஸக்குண்டுகளால் அலங்கரிக்கப்பட்ட விதானங்களுடனும் கூடியதுமான 'பீடன்' ஒன்று ரூ 2750-க்கு இக்கல்யாண ஊர்கோலத்துக்கென்றே 'ஸ்பெஷல் ஆர்டரின்' பேரில் புதிதாய்த் தயாரிக்கப்பட்டு, வந்திருக்கின்றது.

அவ்வண்டிக்கும, நமது மஹாராஜாவின் அந்தஸ்துக்கும், தக்கதான இரண்டு உயர்வகை ஆஸ்த்ரேலிய மட்டங்கள் ரூ 3500க்கு வாங்கப்பட்டு அவைகளும் வந்து சேர்ந்தன.

துரைகளுக்கும், துரைபோல் நடிப்போர்க்கும், தாங்கள் ஸாக்ஷாத் துரைகள் தாமென்று மதித்துக் கொள்வோர்க்கும, அந்தஸ்துக்குத் தக்கபடி "டி. என் ஜலிஸ்" கம்பெனியாரிடமிருந்து 5000 ரூபாய் தீனிக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டு அக்கம்பெனியார் தமக்கென் வேலையிலிருக்கும் பாகசாஸ்திரநிபுணனான ப்ரான்ஸ்தேசக் குசினிக்

காரச் சிரேஷ்டர் ஒருவனைத் தக்க விப்பத்திகளுடன் அனுப்ப அவனும், மணிபுரம் வந்து சேர்ந்தான்.

நானாதேசங்களினின்றும், நானாவித உயர்ந்த வாத்தியக்காரர்களும், பாட்டுக்காரர்களும், அஷ்டாவதானம், சதாவதானம், இந்திரஜாலம், மஹேந்திர ஜாலம், நாட்டியம், நாடகம், ஸர்க்கஸ் முதலான பல வித்தைகளில் கைதேர்ந்த வித்வான்களும, வந்து சேர்ந்தார்கள். செந்தமிழில் சிறந்த அகணித குணகண ஸமஸ்த ஸாமந்த ஸீமந்த ஸாம்ராட் ராஜாதிராஜ ஸமஸ்தான கவிச்சிங்கம், சதாவதானம் * ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமான் செல்லையப்பக் கவிராயரவர்களும் தமது சீடர் குழாங்களுடன் அப்பொழுது தான் விஜயம் செய்திருக்கிறார்கள். அதிகமாய் வர்ணிப்பானேன்? விவாஹ காரியங்கள் வெகு தடபுடலாய் நடந்து வருகின்றன.

"காதலும் துரோகமும் காவலுக்கடங்கா" என்ற பழமொழிப்படி, இந்நிலைமையில் நமது மாதவனும், மாலினியும், கமலாவின உதவியால், ஸங்கேதத்தின் பேரில் அடிக்கடி ஏகாந்தமாய் ஸந்திப்பதும், காதல் மொழிகள் கூறுவதும், ரகஸ்யங்கள் சொல்லிக்கொள்ளுவதும், இன்னும் பலவிதமாய்க் கூடாலோசனைகள் செய்வதுமாய் இருந்தார்கள். இவர்கள் உள்ளத்தில் என்ன நினைத்திருக்கின்றார்களோ நாம் அறியோம். ஆனால மாலினியும் மாதவனும், ரஹஸ்யமாய் நிசி வேளையில் அரண்மனையினின்று வெளியேறி, எங்கேயாவது ஓடிப்போவது என்ற யோசனையும் செய்தனர். ஆனால், அப்படிச் செய்வது மாலினியின் உயர் பிறவிக்கும் கற்புக்கும, மாதவனுடைய ஆண்மைக்கும் பெருந்தன்மைக்கும் முற்றிலும் விரோதமெனவும், உலகத்தார் பழிக்க ஓர் இடமாகும் என்றும் பிறகு நினைத்து, அவ்வாறு செய்வது தகுதியல்லவென்று ஒருவாறு தீர்மானித்துவிட்டார்கள். பின்பு அவர்கள் என்ன தான் எண்ணியிருக்கின்றார்கள்? திருவேளை அவர்களுக்குள் உள்ள பரஸ்பரக் காதல் மாறிவிட

* குறிப்பு:— ஸ்ரீலஸ்ரீ. இது சீலஸ்ரீ எனனும ஸமஸ்கிருதபதத்தின் மரூஉ. சீலம்—ஒழுக்கம் ஸ்ரீ—ஸம்பத்து. ஒழுக்கமே ஸம்பத்தாய் உடையவர்கள். 'ஸ்ரீல' என்ற பதம் இருப்பதாகத் தெரியவில்லை. எக்காரணபற்றியோ சீலஸ்ரீ என்னும் அழகிய பதம ஸ்ரீலஸ்ரீ என்று உபயோகப்படுத்தப்படுகிறது.

டனா? அல்ல. அவர்கள் செய்துகொள்ளும் சிங்காரச்சேஷ்டைகளைக் கவனிக்குங்கால், அக்காதல் அதிகரித்தே வருவதாய்த் தோன்றுகின்றது. அல்லது, தாங்கள் அந்தக்ஷணத்துக்கு முன் உயிர் துறந்து விடுவதாய் வீராவேசம் (Despair) பூண்டு விட்டார்களா? தர்மமே உருவெடுத்து வந்தாற்போல் விளங்கும் அவர்கள் அவ்வாறு தற்கொலை செய்யத்துணியார்களே. அல்லது, ஸமயத்தில் 'மாட்டேன்' என்று மாலினி ஆக்ஷேபிக்கத் தீர்மானித்து விட்டாளா? பித்ரு பக்தியில் சிறந்த நமது கதாநாயகி அப்படிச் செய்யத்தக்கவளல்லவே! பின்பு அவர்கள் என்னதான் எண்ணியிருக்கின்றனர்? கல்யாணக் கார்யங்களோ வெகு தடபுடலாய் நடக்கின்றனவே!

ஆஹா, 'மனம்' என்பது இருக்குமிடம் தெரியாவிடினும், அம்மனக் கோட்டைக்குள் அடக்கப்பட்டு மற்றோருக்குச் சற்றேனும் தெரியாது எவ்வளவோ கூடமாய் காக்கப்படும் விஷயங்கள் எண்ணிறந்தவைகள் உள. 'மனம்' எனும் இவ்விசித்ர இந்திரியத்தின் அமைப்பும் அதன் அற்புதச் செய்கைகளும் ஆலோசிக்க ஆலோசிக்க எவ்வளவு ஆச்சர்யத்தை விளைவிக்கின்றன! இந்நிலையில் நமது கதாநாயகர்களின் உள்ளத்தில் என்ன கள்ள எண்ணங்கள் குடிகொண்டிருக்கின்றனவென்று அறிந்து, ஆவலுடன் அறிய விரும்பும் நமது நண்பர்களுக்குத் தெரிவித்து அவைகளைத் திருப்தி செய்யப் போதுமான ஞான திருஷ்டி (Thought-reading)எனும் அற்புத சக்தியும் நமக்குக் கிடையாது. ஆதலால் நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுவோம். நிற்க.

நமது சரித்திர தினத்தின் பிற்பகல் சுமார் 3 மணி நேரத்தில் அரண்மனைக்குச் சற்று தூரத்திலுள்ள ஓர் சோலையில் ஓர்மறைவிடத்தில், மாமரத்தடியில் போடப்பட்ட ஓர் சலவைக்கல் ஆஸனத்தின் மேல் நமது மாதவனும் பரதேசியும் ஏதோ ஸம்பாஷித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பரதேசி:—"மாதவ! என் கண்மணி! நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். எல்லாம் சுபமாகவே முடியும்."

மாதவன்:—"ஸ்வாமி! அது சரிதான். சுபம் என்பது மணிபுரம் ஜமீன்தாருக்கோ, அல்லது அடியேனுக்கோ?"

பரதேசி:—(புன்னகைகொண்டு,) அப்பா! மாதவ! நீ நன்றாய்க் கேட்டாய்! நீ நலல புத்திசாலி!—என் அன்புக்கு எவன் பாத்திர னோ—அவனுக்குத்தான் சுபம்.''

மாதவன்:—(சற்று சந்தேகத்துடன் திடுக்கிட்டு) ''ஸ்வாமி தங்கள் அன்புக்கு அடியேன்—''

பரதேசி:—(மடமடவென்று சிரித்துக்கொண்டு,) ''பேஷ் பேஷ்! அது வேறே சந்தேகமா! அப்பா! என் கண்மணி! நீ—''

மாதவன்:—''ஸ்வாமி! நல்லது! அன்று 'டில்லி சக்ரவர்த்தி—அவனுககு இரண்டு புதல்வர்கள்—' என்று ஏதோ கதைசொல்ல வந்தீர்கள். அதன் முடிவும், சொல்ல நேர்ந்த ப்ரக்ருதமும அடியேனுக்கு—''

பரதேசி:—(அலட்சியமாய்) ''ப்ஸ்! மாதவ! எல்லாம் ஸமயோசிதமாய்ச் சொன்னால் தான் ஸ்வாரஸ்யம். ஆனாலும் சொல்லுகிறேன். இளையவன், தமயனைக்கொன்று, அவ்வபவாதம் தனனைச் சாராவண்ணம், வெகுகாலம் துக்கம் பாராட்டி வந்ததுமின்றி தமயன் சமாதியின் மேல் பளிங்குக கல்லால், ஓர் விசித்திரமான சமாதியும் கட்டியிருக்கின்றானாம. 'இதெல்லாம் உனக்கென்ன கவலை!—''

இதற்குள் பக்கத்துப் பூம்பந்தலினின்றும் சல சல வென்று சத்தம கேட்டது.

பரதேசியார்.—''நான் போய்வருகிறேன். ஜாக்ரதை! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும்! ஜாக்ரதை,'' என்று எச்சரித்து விட்டு, தன் 'சோட்டா' த்தடியைக் குலுக்கிக் 'கல் கல்' என்று சத்தித்துக்கொண்டு, ஆங்கோர் புதரில் மறைந்தார்.

மாதவன், தான் இதுவரை பரதேசியாருடன் செய்துவந்த ஸம்பாஷணைகளையும், தன் க்ஷேம ஸமாசாரஙகளைப்பற்றி யவர் அவ்வளவு உறுதியாய் இருப்பதையும், பார்ப்போர்க்கு ஓர் பேதை போல் தோன்றும் அவர் உண்மையில் உலக விவஹாரங்களையும், அதற்கிணங்க அப்போதைக் கப்போது நடந்துகொள்ளவேண்டிய ஸகல தந்திரங்களையு மறிந்தவராயிருப்பதையும், எல்லாம் துறந்த ஞானிபோல தோன்றும் அவர் ஏதோ மனதில் ஓர் ஸங்கல்பம செய்திருப்பதையும, அது நிறைவேறுவதற்குத் தக்க உபாயங்களைச் செய்துவருவதையும, மேலும் தன்னிடத்தில் எக்காரணமபற்றியோ விசேஷ அன்பு பாராட்டுவதையும், தவிரவும், யாதொரு ஸம்பந்தமும, ஸந்தர்ப்பமுமில்லாமல், டில்லி சக்ரவர்த்தி கதை சொல்லியதையும் நினைத்து, இவையெல்லாம் ஓர் கனவு போல் தோன்ற, மாதவன் சிந்தையில் மூழ்கலானான்.

இத்தருணத்தில் பக்கத்திலிருந்த பூஞ்சோலையினின்றும், நமது மாலினியும் அவள் தோழி கமலாவும் வெளியேறி மாதவன் முன் ப்ரத்யக்ஷமானார்கள்.

ஏதோ தற்செயலாய் வந்தவள் போல பாவனை செய்து கமலா மாலினியை நோக்கி, 'மாலினி! சற்று இம்மரநிழலில் சலவைக்கல் லாஸனத்தில் உட்கார்ந்திரு. நான் தாமரைத்தடாகஞ் சென்று உன க்குத் தாகத்துக்கு தீர்த்தம் கொண்டுவருகின்றேன்'' என்று சொல்லி மாலினியைப் பிரிந்து மறைந்தாள்.

மாலினி, தான் ஏகாந்தமாய் மாதவனருகில் இருப்பதைக் கண்டு, தனது அங்கங்களெல்லாம் புளகிக்க, ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருக்கும் அவனண்டை சென்று, அப்பளிங்காஸனத்தி லம ர்ந்து, தனது வலக்கையால் அவனைத் தழுவி கடக்கையால் அவன் முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்து காதல் பரவசையாய் முத்தமிட்டு "என் அன்பே! என் மாதவ! என்ன யோசனை? பக்கத் திலிருக்கும் மாலினியை மறந்து விட்டாயோ!'' என்று இனி மையாய் வினவ, மாதவன் கனவு கண்டு விழித்தவன் போலப் ப்ர பரப்புடன் திரும்பிப்பார்த்து, மாலினியை வாரியணைத்துப் பிரதி முத்தமிட்டு "என் கண்மணீ! ஏது! இந்நேரத்தில்—இவ்வெயில் தருணத்தில்—இவ்விடம் வந்தாய். நீ அரண்மனையை விட்டு வெளி யேறின விஷயம் யாருக்காவது தெரிந்தால் மிகுந்த சந்தேகத்துக்கு இடமாகுமே! என் கண்மணீ! பயந்து பயந்து காலங்கழிக்கும்படி நமது தலையிலும் ஈசன் எழுதியிருக்கின்றானே!'' என்று தீனமான குரலுடன் பிரலாபித்துக்கொண்டு, மாதவன் கண்ணீர் சொரிந்தான்.

மாலினியும் அடங்காத்துயரத்தால், தன் கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருக, மாதவன் முகத்தை நோக்கி "என் மாதவ! ஐயோ! என்னசெய்வேன! எனக்குச் சற்றேனும் இருப்புக்கொள்ளவில்லையே! இன்றைக்கு மூன்றாம் நாள் விவாஹ மாமே, கல்யாண காரியங்கள் நடக்கும் அவஸரத்தைப் பார்த்தால் என் வயிறு எரிகின்றதே! ஐயோ! உன்னை நான் காதலித்தபிறகு, அப் பாவி கையை எவ்வாறு பிடிப்பேன்?—''

மாதவன்:—"கண்ணே! நாம் என்ன செய்வோம்.' அன்று அவன் எழுதிய எழுத்தில அணுவேனும மாறாது. நாமிருவரும் காதலராய்க் கூடிவாழ்வது தெய்வசம்மதமில்லை யென்றால், நம் முயற்சியால் என்ன செய்யத்தக்கது? ஆனால் ஒன்று மாத்திரம் என் மனதில் தோன்றிக்கொண்டிருக்கின்றது. கடைசியில எல்லாம நமது இஷ்டப்படி சுபமாகவே முடியுமென்று—''

மாலினீ:—மாதவ! என் அன்பே! ஏது நீ சித்தப்பிரமை கொண்டுவிட்டாயோ? ஐயோ! கேடுமேல் கேடுவிளைந்துகொண்டிருக்கும் இக்கொடுங்கோலங்களைப் பார்த்துக்கொண்டிருந்தும், கடைசியில் எல்லாம் சுபமாய் முடியுமென்கிற நிச்சய புத்தி யுனக்கு எவ்வாறு உதித்தது.? ஐயோ! எனக்கு ஒன்றும் நல்லதாகத்தோன்றவில்லையே! ஒருவேளை என்மீதுள்ள காதல் மிகுதியால், இப்பொழுது நேரிடுபவற்றின் பலாபலன்களைப் பகுத்தறியும் புத்தித்திறமையையும் இழந்துவிட்டாயோ? ஐயோ! என்ன செய்வேன்! செந்தாமரை போன்ற உன் அழகிய வதனம், சோகத்தல் வாட்டமுற்று விட்டதே—" என்று கதறிக்கொண்டு, கண்ணும் கண்ணீருமாய் மாதவன் மார்பிற் சாய்ந்தாள்.

நமது கதாநாயகர்கள் சோகம் என்னும் பெருங்கடலில் ஆழ்ந்து பெரும்புயல்களால் தாக்கப்பட்ட படகுபோல் நிலையற்றுத் தவிக்கும் இந்நிலைமையில் திடீரென்று தினகரன் வீரகோலத்துடன் அவர்கள் முன் ப்ரத்யக்ஷமானான். தன் அருமைச் சகோதரி மாலினியும், 'உண்ட உணவுக்கு இரண்டு நினைத்த பரமத் துரோகியான' மாதவனும், எவ்வளவோ இதற்குமுன் எச்சரித்தும், மறுபடியும் இக்கோலத்திலிருக்கக் கண்டதும், தினகரனுக்கு அடங்காக் கோபம் பொங்கிவிட்டது. கண்கள் சிவந்தன. அவன் இள மீசை படபடவென்று துடித்தது. பற்களை 'நறநற' வென்று கடித்தான். திடீரென்று உடைவாளை யுருவிக் கிறுகிறுவென்று சுழற்றிக்கொண்டு "அடே! சண்டாளா! துரோகி! பாதக! உன்னை இப்பொழுதே இக்கத்தியால் இருதுண்டாக்கிவிட்டு—" என்று கர்ஜித்துக்கொண்டு வீமக்குட்டிபோல் துள்ளி மாதவன் ஸமீபத்தில் பாய்ந்தான்.

உடனே மாதவனும் மாலினீயும் திடுக்கிட் டெழுந்தார்கள். மாதவனும் தன் உடைவாளின் பிடியை, சமயத்துக் குதவும்பொருட்டுக் கெட்டியாய் வலக் கையால் பிடித்துக்கொண்டு, தைர்யமாய்த் தினகரனை நோக்கி "தினகர! பதறாதே! நான் உனக்கு எவ்விதத்திலும் இளைத்தவனில்லை ஞாபக மிருக்கட்டும். நீ படித்தவித்தையை நானும் படித்திருக்கிறேன். நீ கற்ற வித்தைகளை நானும் கற்றிருக்கிறேன். ஆயினும், எனக்கு அன்னமிட்டு இதுவரை வளர்த்த அம்மஹானுடைய புதல்வனாய் நீ இருப்பதாலும், நாமிருவரை சகோதரர்போல் பால்யமுதல் பழகிவந்த வாஞ்சையாலும், உன் சொற்களைப் பொறுக்கிறேன். நீ பிதற்றிய மொழிகளை வேறு எவராவது சொல்லியிருப்பார்களாகில்———"

தினகரன்.—"அடே துஷ்டா! என்ன சொன்னாய்?. என்னிடத்தில் நீ தாக்ஷிண்யப் படவேண்டாம். உன் சாமர்த்தியத்தைக் காட்டு. இக்ஷணத்தில் நம்மிருவரில் ஒருவராவது உயிர் துறப்பது திண்ணம்——"

மாதவன்:—"தினகர! ஆலோசித்துப் பார். நாமிருவருமே இவ்வுலகத்தில் இருக்க முடியாதா?"

தினகரன்:—"இனி யொருக்காலும் இல்லை.".

இதற்குள் மாலினீ சற்று தைர்யமடைந்து தினகரன் 'பாதங்களில்விழுந்து, மண்டிபோட்டு இரண்டு கால்களையும் கட்டிக்கொண்டு, சோகத்தாலும், பயத்தாலும் வாடிய தன்முகத்தை நிமிர்த்திக் கண்ணும் கண்ணீருமாய்த் தன் தமயன் முகத்தை நோக்கி "அண்ணா! அண்ணா! ஐயோ! என் முகத்தைப் பாரேன். ஐயோ! மாலினீமேல் உனக்கிருந்த வாஞ்சையை மறந்துவிட்டாயோ? அண்ணா! எவ்வளவோ அன்புடன் வாழ்ந்த நீங்களிருவரும் இவ்வாறு விரோதிகளாய் மாறியது கேவலம் என்னிமித்தந்தானே! என்உயிர் துடிக்கின்றதே! இனி என்னால் ஒரு க்ஷணமும் உயிர் தாங்க முடியாது. நான் வாழ்வது—" என்று 'கோ!' வென்று கதறினாள். இதற்குள் கமலாவும் வந்து சேர்ந்தாள்.

தினகரன்:—(தான் உயர்த்தியகத்தியை வெறுப்புடன் தாழ்த்திக்கொண்டு) "மாலினீ! கமலா! நீங்கள் இருவரும அரண்மனை செல்லுங்கள். இனி ஒருக்ஷணங்கூட இங்கே தாமதியாதேயுங்கள்," என்று கோபத்துடன கட்டளையிட்டான்.

மாலினீ:—"அண்ணா! நாங்கள் போகிறோம். ஆனால் தாங்களும் மாதவனும்—"

தினகரன்:—"போ' என்றால் உடனே புறப்படவேண்டும். அதிகமாய் வார்த்தைகள் வளர்க்காதே! நட!"

மாலினீ:—(மாதவனை நோக்கி தீனமான குரலுடன்)"மாதவ! நாம் மூவரும சகோதரர்கள்போல் சிறிதுகாலமாவது அன்புடன் வாழ்ந்தது உண்மையானால், எனது தமயன் என்ன சொன்னாலும் நீ—"

மாதவன்:—"கண்மணி! மாலினீ! எனக்குக் கொடிய விரோதியாயினும் என் மாலினிக்கு ப்ரியமானவர்களுக்கு அணுவளவேனும கெடுதி செய்யத்துணியேன்" என்று கம்பீரமாய்ச் சொன்னான்.

மாலினியும் கமலாவும் சோகாக்னியில் மூழ்கியவர்களாய் அரண்மனை நோக்கிச் சென்றார்கள்.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், **B. A. B. L.**

* சரீரசுகம்.

மலர்தலை யுலகத்து எய்தற்கரிய இம்மானிடப்பிறவியைக் கடவுளின் அருளாற் கிடைக்கப்பெற்ற யாம மும்மைப்பயனும் அடைவதற்கு,சரீரமேதுணை. ஆகையால்"நோய்க்கிடங் கொடேல்" என்ற ஔவைப்பிராட்டியாரின் அமுதவாக்கின்படி சரீரத்துக்குப் பிணி அணுகாவண்ணம் அதைக் காப்பாற்ற வேண்டும்.

முதன்மையாக நமக்குக் காற்று அவசியம் வேண்டும். நம்முடல் தோன்றும்போதே தோன்றிய மூச்சுக் காற்றானது நம்மை விட்டு நீங்கின் நாம் அழிந்து விடுவோம். நாம் உணவும் பானமும் இல்லாது சிறிது நாள் ஜீவித்திருக்கலாம்; காற்று இல்லாது ஜீவித்திருக்கச் சிறிதும் முடியாது. இதற் குதாரணமாக நாம் ஒரு (ஸ்டாண்டு) விளக்கைக் கொளுத்தி "சிம்னி" யை அதில் வைத்து அதன் மேற்புறத்தின் வழியாய்க் காற்று நுழையாமல் ஒரு தகட்டை வைத்து மூடுவோமானால் அத்தீபம் சிறிது நேரத்தில் அணைந்துவிடும். இதனால் காற்று இல்லாவிட்டால் எந்த ஜீவனும் பிழைக்கமாட்டாதென்று பெறப்படுகிறது.

காற்றிலும் நல்ல காற்றே அவசியம் வேண்டும். ஏனெனில், துர்வாஸனையுடையதும் அசுத்தமானதுமான காற்று சரீரத்தில் நுழையின் நம் சரீரம் நோயாற் பீடிக்கப்படும். நாம் விடுகிற மூச்சுக்காற்றுக்கும் சுத்தமான இடத்தில் இருந்துவருகிற காற்றுக்கும் வித்தியாசம் உண்டு. இதைப்பார்ப்பதற்கு நாம் விடுகிற மூச்சுக் காற்றை ஒரு பாத்திரத்திற் சேர்த்து அந்த இடத்தில் ஒரு விளக்கை வைத்தால், அது அணைந்துவிடும். இதனால் நாம் விடுகிற "மூச்சுக் காற்று அசுத்தமென்று தெரிகிறது. ஆகையால் அதை உட்கொள்ளுதல் கூடாது. அன்றியும் அசுத்தமான வஸ்துக்களில் படிந்துவரும், காற்றை உட்கொள்ளுதலும் கூடாது. இதை நீக்குவதற்கு ஜன நெருக்கமான இடத்திலும் மலஜலங் கழிக்கும் இடத்திற்குச் சமீபத்திலும் வீடு கட்டுதல் கூடாது. சுத்தமான காற்றுவரும் இடத்திலேயே வீடு கட்டவேண்டும். அப்படிக் கட்டும் வீட்டிற்குப் போதிய அளவு காற்று வரக்கூடியதற்குச் சிறிய ஜன்னல்கள் வைத்தால் சௌகரியப் படாதாகையால் உள்ளிருப்பவர்களின் மூச்சுக் காற்றானது இலகுவாய் வெளியிற்

---

* இது மயூரகிரி (குன்றக்குடி) யை அடுத்த வயிரவன்'கோவிலில் 27—11—11ல் கூடிய "மேலைச்சிவபுரி சன்மார்க்கசபை"யில் ஸ்ரீமத் அ. சண்முகம்பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் படிக்கப்பெற்றது.

செல்லவும் வெளியிலுள்ள நல்ல காற்றானது தடையின்றி உள்ளே வரவும் கூடியவரை பெரிய ஜன்னல்கள் வைக்கவேண்டும். அப்படிப் பெரிய ஜன்னல்கள் வைப்பதிலும், அந்த ஜன்னல்களுக்கு எதிர்ப் புறமும் அதே மாதிரியான ஜன்னல்கள் வைத்தாலன்றிக் காற்றுத் தடையின்றி உள்ளே செல்லவும் வரவும் முடியாது.

அன்றியும், வீட்டிற்கு முன்பக்கத்திலும் சுற்றுப் பக்கங்களிலும் சாக்கடைநீர் முதலிய அசுத்த ஜலம் தங்கவைத்தலும் அழுகிய பதார்த்தங்கள் கிடக்கும்படி செய்தலும் கூடாது.

இனி, நாம் நித்திரை செய்யும்போது அநேக ஜனங்களுடன் நித்திரை செய்தலாலும் முகத்தில் வேஷ்டி கம்பளிகளால் மூடிக் கொள்ளுதலாலும் நாம் விடுகிற (அசுத்த) மூச்சுக்காற்று மறுபடியும் உள்ளே செல்லுமாதலால், அவ்வழக்கங்களை நீக்கவேண்டும். குளிர் காலங்களில் சரீரத்தில் மட்டும் நயமான கம்பளிப் போர்வையால் மூடிக்கொள்ள வேண்டுமேயொழிய ஜன்னல்களை மூடுதலும் முகத்தை மூடுதலுங் கூடாது. இதில் இன்னம் ஒன்று கவனிக்க வேண்டும். மூச்சுக்காற்று இலகுவாய்ச் சென்று நல்ல காற்று உட்கொள்ளுவதற்கு முகம் முழுதும் மூடாதிருக்க வேண்டுமேயல்லது சரீரம் முழுதும் மூடாதிருக்க வேண்டியதில்லை. ஆகையால் நாம் வெளியிற் செல்லும்போதும் மற்ற சமயங்களிலும் சரீரத்தைச் சட்டையினாலாயினும் போர்வை அல்லது வஸ்திரத்தினாலாயினும் மூட வேண்டும். ஏனெனில் மார்பிலும் விலாப்புறங்களிலும் மயிர்த் துவாரங்களின் வழியாய்க் காற்றுச் சென்றால் அதனால் உள்ளே சளி உண்டாய் இருமல் ரோகம் உண்டாகிறதென்று வைத்தியத்திற் றேர்ந்த பெரியவர்கள் கண்டிருக்கிறார்கள். இதை எண்ணியே முற்காலந்தொட்டு இரண்டாவது வஸ்திரம் அவசியம் வேண்டுமென்று சொல்லப்பெற்று இந்நாள்வரை நாம் அணிந்துகொண்டிருப்பதாகும்.

இனி உணவைப்பற்றி ஆராய்வோம். முந்திய யுகங்களிலுள்ளவர்கள் உணவின்றியுஞ் சிலகாலமிருப்பதற்குச் சரீரம் இடங்கொடுத்ததாயும் இக்காலத்திலுள்ளவர்களுக்கு "அன்னமயம் பிராணன்" என்றும் சொல்லுகிறார்கள். அனுபவத்திலும் அப்படியே. ஆகையால் உணவு அவசியம் வேண்டும்.

அவ்வுணவிற்கு இன்றியமையாதது நீராம். ஏனெனில் உண்பார்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கியும் அவற்றை யுண்ணுகிறவர்

களுக்குத் தானும் உணவாய் நிற்பதும் நீராம். இதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉ மழை" என்று கூறினார்.

ஆகையால் யாவரும் ஜலவசதியுள்ள இடத்தில் இருக்கவேண்டும். "நிலத்தியல்பானீர் திரிந்தற்றாகும்" என்று பெரியார் சொன்னவாறு நிலத்துக்குத் தக்க வண்ணம் நீரின் குணம் வேறுபடுகிறது. ஆகையால் அசுத்தமான இடத்திலுள்ள நீரைக் குடித்தல் கூடாது. ஏனெனில் அசுத்தமானது அந்நீருடன்சேர்ந்து சரீரத்திலுள்ள நல்ல இரத்தத்தைக் கெடுத்து விடுகிறது. ஆகையால் கண்மாய் குளங்களிலுள்ள நீரிலும் கிணற்றுநீரே நன்மையாம். கண்மாய் குளங்களிலுள்ள ஜலம் வரும்போது கால்வாய்களிலுள்ள அசுத்தத்துடன் சேர்ந்து வருதலாலும் ஜனங்கள் ஸ்நானஞ்செய்தல் வேஷ்டி துவைத்தல்களாலுண்டாகும் அழுக்கினாலும் கால்கழுவல் முதலானவைகளினாலும் அசுத்தம் அடைந்திருப்பதால் கிணற்று நீரையே உபயோகப்படுத்துவது நலமாகும். கிணற்றுக் கருகில மரங்களிருந்தால் அதிலுள்ள இலைகள் உதிர்தலாலும் அதில் தங்கும் பட்சிகளின மல ஜலங்கள் உள்ளே விழுதலாலும் நீர் அசுத்தம் அடைகிறது. ஆகையால் கிணற்றின் அருகில் மரங்கள் வைத்தல் கூடாது. சில கிணறுகள் சிலகாலம் நல்லஜலமாயிருந்து பிறகு உவர்ப்பு முதலிய குணங்களுடைய வாகின்றன. ஏதனாலெனில், கிணற்றின் அருகில் மல ஜலங் கழித்தல் முதலான அசுத்தத்தினாலேயே அந்த அசுத்தம் மண்ணூற சேர்ந்து அதிலிருந்தும் கிணற்றிற் சேருகிறது. இது சிறிது சிறிதாகச் சேருகிறதினால் நமக்குச் சீக்கிரம் புலப்படுகிறதில்லை. ஆகையால் கிணற்றின் அருகில் மல ஜலங் கழித்தல் முதலான அசுத்தஞ் செய்தல் கூடாது. அன்றியும் கிணற்றில் சூரியகிரணம் படுதல் நன்மையாகும். கிணற்று ஜலம் நல்லதாய், இல்லையேல் கண்மாய் குளங்களில் இருப்பவைகளில் தெளிவான ஜலத்தை வடிகட்டி யெடுத்துக்கொண்டு வந்து வெந்நீராக்கி வடிகட்டி அதிக உஷ்ணமில்லாமலும் அல்லது உஷ்ணந்தணியவைத்தும் உட்கொள்ளுவது நலம். (இன்னும் வரும்)

தெ. அரு. சித இராமநாதச் செட்டியார்.

கண்டனூர்.

தஞ்சைப் பெரிய கோவில்.

பொன்னி நதிபாயப்பெற்றுப் புனனாடெனப்பெயர்கொண்டதும், சோழநாட்டின் தலைமைநகராயிருந்ததுமான தஞ்சாவூரிலுள்ளப் பெரியகோவிலானது, ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார்ஒருமைலுக்குள்ளாக இருக்கிறது. இக்கோவிலுக்கு வடக்கே, உற்சாகத்தை உண்டாக்கி மனக்களைப்பை மாற்றுதற்கேற்ற குளத்தோடு மிக்க அழகு வாய்ந்த சிவகங்கைத் தோட்டமும், தெற்கே, கச்சேரிகளிருந்து ஸ்ரீ ஆபிரகாம் பண்டிதர் தோட்டத்திற்கும் வல்லத்திற்கும் போகும் மார்க்கமும், மேற்கே, அதிஅற்புதமான நீலகிரிதோட்டமும், கிழக்கே, 'அலக்ஸாண்டிரா மருத்துவச்சாலை'யிலிருந்து சப்மாஜிஸ்திரேட் ஆபீசுக்குப்போகும் பாட்டையும் இருக்கின்றன. இக்கோவிலைச்சுற்றி ஆழ்ந்த அகிழ்களும், உயர்ந்த மதில்களுமிருக்கின்றன.

இந்தப் பெரிய கோவிலை—அதன் கோபுரம் மிகப்பெரிதாதல் பற்றியும் நந்தியோ அம்மையார் சிவலிங்கம் முதலியவைகளுயர்ந்தும் பருத்தும் இருத்தல்பற்றியும்—பெரிய கோவில் என்பர். சோழ, சேர, பாண்டிநாடுகள் மூன்றையும் ஆண்டதனால் 'மும்முடிச் சோழ'னெனும் சிறப்புப்பெற்ற முதலாவது இராஜராஜசோழ தேவனால் கட்டப்பட்டதால் இராஜராஜேசுவரம் என்றும் அதற்கோர் பெயர் உண்டு. இன்னும் சில பெயர்களிருப்பதாகவும் தெரிகிறது. 'பெரியநாத' ரென்றும் 'இராஜராஜேஸ்வரர்' என்றும் 'பிரகதீச' ரென்றும் சுவாமிக்கும், 'பெரியநாயகி' இராஜராஜேசுவரி' 'பிரகந்நாயகி' என்று அம்மைக்கும் பெயர். இவர்களுக்கு வேறு பெயர்களும் உண்டு.

இக்கோவிலுட் சென்றவுடன் யாவரும் வியக்கும் ஒரே சலவைக்கல்லாலாய பெரிய நந்தியொன்று சிற்பவேலைத்திறத்தை விளக்கக்கூடிய ஓர் அற்புத நாற்கால்மண்டபத்தில் இருக்கிறது. நந்தியின் நீளம் 16அடி. உயரம் 12அடி. குறுக்களவு 7அடி எனக்

* இப்பெரிய கோவிலைப்பற்றிய காலவரையறை முதலியன, தஞ்சை அரண்மனையார் வெளியிட்ட தண்டுப்பத்திரிகையையும் சிலாசாஸனபரிசோதகர் ஸ்ரீமான் து. அ. கோபிநாதராவ் M. A. அவர்களெழுதிய சோழவம்சச் சரித்திரச்சுருக்கத்தையும் துணையாக்கொண்டு எழுதியவை.

கணக்கிடப்பட்டிருக்கிறது. நந்திக்கு 16 கஜமுள்ள ஆடையை அரையிற் சுற்றுகிறார்கள். இன்னும் எண்ணெய்க் காப்பிடுவதென்றால் சுமார் கால்ஆடத்திற்கு மேலேயே செலவாகின்றது. இந்நந்திக்கு முன்னர் ஓர் பெரிய உயர்ந்த கொடிஸ்தம்பம் நிற்கின்றது. இதன் பக்கத்தே தென்புற நோக்கிய லோகநாயகியான அம்மையார் வீற்றிருக்கின்றனர். அம்மையின் அருமை பெருமைகாண அநேக கண்கள் வேண்டும். நிற்க.

நந்தியின் நேர்முக நோக்கி உள்ளே சென்றால் ஆக்கி அளித்து அழிக்கும் எல்லாம் வல்ல இறைவனது மூலவிக்ரகத்தைக்காணலாம். அது லிங்கவடிவாயுள்ளது. அதன் உயரம் பெருக்கம் பெருமை முதலியவற்றை என்னென்பேன்! மூலத் தானத்தில் இதற்கென்றே கட்டப்பட்டிருக்கும் உயர்ந்துள்ள படிக்கட்டுகளின் மீதேறியே அபிஷேகம் செய்யவேண்டும். இன்றும் இப்போது அங்குள்ளகுருக்களில் சிலர் மூலத்தானத்திற்குச் சந்தனப் பொட்டணிவதற்குப் பதிலாக சாக்கிய நாயனார் கல்லெறிந்ததுபோல குறிபார்த்துச்சந்தனத்தை உருண்டையாக்கி விட்டெறிகிறார்களென்று சொல்லக் கேள்வி. இதனாலும் மூலஸ்தானத்தின் உயரம் ஊகிக்கற்பாலது. மேலும்ஆயிரக் கணக்காகச் செலவிட்டு சந்தனக்காப்பலங்காரஞ் செய்பவர்கள் மூலஸ்தானத்தின் முன்பக்கத்திற்குமட்டுமே காப்பிடுகிறார்களென்றால் அதன் பெருக்கத்தைப் படிப்பவர்களே அறிக. அம்மையார் சிவலிங்கத்தின் சுற்றளவு கணக்கிடப்படவில்லை இதற்குக்காரணந் தெரியவில்லை.

இக்கோவில்பிராகாரத்தின் தெற்கில் உயர்ந்தபடிக்கட்டுகளமைந்த தட்சணாமூர்த்தி சந்நிதானமுள்ளது. இதன் பெருமையை ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியது. மேற்கில், இக்கோவிலைச் சிறப்பித்துப்பாடியவரும் கோவில் கட்டியகாலத்தி லிருந்தவருமான கருவூர்த்தேவர் (சமாதி) கோவிலொன் றிருக்கின்றது. அதன்பக்கத்தில் சிற்பவேலை இலக்கணம ஒருசிறிதும் வழாது கட்டப்பட்டிருக்கும் எங்குலநாதரும் எல்லாவல்லவருமான சுப்பிரமணியர் ஆலயம் ஒன்றிருக்கின்றது. இதனைக்கண்டோர் கணமேனு மகலார். வடக்கில் (இச்சுப்பிரமணிய ராலயத்தின் பக்கத்தே) தஞ்சையை ஆண்ட மன்னர்களின் உருவம் தீட்டப்பெற்றுள்ள ஓர் அழகிய மண்டபம்

இருக்கின்றது. கிழக்கில் அலங்கார மண்டபமும் குறவஞ்சிநாடகம் ஆடுதற்கென்றே அமைத்துள்ள மேடையுமிருக்கின்றன. காட்சிக்கினியன. மூலஸ்தான(கர்ப்பக்கிருக)முள்ள கோபுரம் வானம்நெருங்கியதோவெனக்கூறும்படியான உயரம் வாய்ந்துள்ளது. இது அவசியங்காணற்குரியது. கோபுரத்தின உயரம் 190, 199, 205 அடிகளெனப்பலவாறாகத் தீர்மானிக்கின்றார்கள். எப்படியாயினும் நூற்றுத்தொண்ணூறுக்கு குறையாதென்றே திண்ணமாய்க்கூறலாம். கோபுரத்தின் சிகரம் 25½ சதுர அடியுள்ள ஒரே சலவைக்கல்லாலாயதாம். இக்கல்லை தஞ்சைக்கு வடக்கே நாலுமைல் தூரத்திலுள்ள சாரப்பள்ளமெனுங்கிராமத்திலிருந்தே வழி தொடங்கியசாரத்தின்வழியே ஒழுங்காகக் கொண்டுவந்து பொருத்தினதாம். இக்கோபுரச்சிகரத்தின் சாயல் பூமியில் விழுவதே இல்லை நிற்க. இக்கோவிலின் பிராகாரங்கள் நான்கிலும் பெருத்த நந்திகள் சிலவும் எண்ணிறந்த சிவலிங்கமும் காணப்படுகின்றன. கோபுரத்தின் நாற்புறத்தினடிகள் முழுவதும் சிலாலேகந்தீட்டப் பெற்றிருக்கின்றன. இச்சிலாலேகங்களே சரித்திர ஆராய்ச்சிக்குத் தக்க சாதகமாயிருக்கின்றன. பிராகாரத்தினளவு 503 அடியும் அகலம் 250அடியுமெனக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. இக்கோபுரத்தில் மற்றைய கோவில்கள்போலல்லாது வைஷ்ணவ சம்பிரதாயமான உருவங்களும் வெளிப்பிரகாரத்தில சைவசம்பந்தமான உருவங்களும் தீட்டப்பெற்றிருக்கின்றன. இதனால் இக்கோவிலானது சைவ வைஷ்ணவபேதமுண்டாவதற்குமுன்னரே கட்டப்பட்டதெனஊகிக்க இடமாகிறது. ஆகவே, சைவ வைஷ்ணவ பேதமேற்பட்டது கொஞ்சகாலத்திற்கு முன்னென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. உண்மை எவ்வாறோ? கோபுரத்தின் வடபாகத்தே சோழர், நாயக்கர், மகாராஷ்டிரர், ஐரோப்பியர், ஆகிய இவ்வகுப்பினரைக் காண்பிக்கும் நான்கு உருவங்கள் இருக்கின்றன. இவற்றை நிருமித்த சிற்பி காஞ்சிபுரத்திலிருந்து வந்த ஓர் அருளபெற்றவனென்றும், அதனால் சோழதேயத் தரசர்களாக இன்னின்ன காலத்தில் இன்னின்னார் வருவாரெனக்காண்பிக்க இவ்வுருவங்கள் சமைக்கப்பட்டிருப்பதாகவும் ஐதீகங்கூறுவதாய்ச் சொல்லியிருக்கின்றனர்.

முருகவிலாஸ்
கருந்தட்டாங்குடி. }

கரந்தை. ஸ்ரீமுருகேசன்.

மகிபாலன்பட்டி வித்துவான்

ஸ்ரீமத். மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

விவாகமும், பிரசங்கங்களும்.

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கட்கு நிகழும் விரோதிகிருது௵ தைமீ ௨௰௬௳ விவாக முகூர்த்தம் மிக்க சிறப்பாக நிறைவேறியது. அவர்களின் சுற்றத்தார்களும் அன்பர்களுமான பல கனவான்களும் வித்துவான்களும் வந்திருந்தார்கள். ௨௰௭௳ காலையில் அங்கு ஒரு சபை கூடியது. அதில் சபையார் விருப்பப்படி மதுரை ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மங்கலம் ஆரிய ஆந்திர ஆங்கில திராவிட வித்துவான் ப்ரும்மஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் "இல்லறப்பயன்" என்னும் விஷயத்தை மிகவும் நயமாகப் பிரசங்கித்தார்கள். முடிவில் அக்கிராசனர் பிரசங்கியார் கூறியவற்றிலுள்ள நயங்களை எடுத்து விளக்கினார்கள். அன்று தினம் மாலையில் மதுரை வித்துவான் ஸ்ரீமத் சுந்தரேசய்யரவர்கள் கம்பராமாயணத்தில் சீதாகல்யாணத்தை வெகு இனிமையாகவும் பொருள் நயம் சிறப்பவும் இன்னிசையுடன் பிரசங்கித்தார்கள். அக்காலை உடனிருந்து சிரவணஞ்செய்து மகிழ்ந்த வித்துவான்கள் கூறிய செய்யுட்கள் அடியில் காட்டப்பெறுவன.

மதுரை வித்தியாபாநு பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் கூறியது.

மலைமுனியைக் காத்துவென்ற தாசரதி சீதைதிரு மணத்தின்
மாண்பு, நிலைமுழுதும் புகல்கம்பன் பெயராழக் காற்றுன் மகிழ்வால்
நேர்ந்தா னென்பாம், மலைமுனியை வெல்லுமொழிக் கதிரேச மீனாஷி
மணாளன் றனிற், றலைமையுறு புலமைபெறு சுந்தரே சய்யர்பிர சங்
கத் தாலே.

சோழவந்தான் வித்துவான்

அரசஞ்சண்முகனாரவர்கள் இயற்றியது.

பேசுந் தரேசர் பிறங்கு முடிமணியின்
மாசுந்த ரேச மணியதிகம்—பேசுங்கால்
கம்பராது நுண்கருத்துங் கண்டளந்து விண்டுசொல்லி
யிம்பரிற்று ணெட்டாவமையின்.

மங்கலம் வித்துவான் ஸ்ரீமத்

ஸ்ரீநிவாசய்யங்காரவர்களியற்றியது.

அந்தரங்க வாரி யமுதுண்டாற் போலன்பர்
அந்தரங்க மானந்த மார்ந்துய்யக்—கந்தரகோர்
தாசரதி மாசரிதஞ் சாற்றுசுந்த ரேசய்யர்
வாசகமெல் லாநன் மணம்.

நெடுவை வித்துவான் ஸ்ரீமத்

திரு. ராமசாமியய்யங்காரவர்களியற்றியது.

சொன்மணமு மான்ற சுவைநீ ருரைமணமும்
பன்மணமு மாங்கம்பன் பாமணத்தின்—றன்மணத்தை
இன்றுமணம் பெற்றகதி ரேசன்மகி ழப்புகன்றான்
தன்றுணைதா னஞ்சுந் தரன்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகரும் வித்துவானுமாகிய

ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்
மணமக்களை வாழ்த்தி யெழுதியனுப்பிய செய்யுள்

நாடுபிர மச்சரிய விரதமுற்றி யில்லறத்தை நடாத்த வேண்டிப்
பீடுபெறு மணமுடித்து மூவருக்குந் துணையாகும் பெற்றிபெற்றுத்
தேடுபெருங் கல்வியினிற் சிறந்தகதி ரேசவள்ளால் கருமால்போல
நீடுவாழ் கெனக்கூடற் சோமசுந்த ரேசர்பத நினைது மன்றே.'

பத்திராதிபர்.

காலஞ்சென்ற ஸ்ரீ பாண்டித்துரைத்தேவரவர்கள்.

[:o:]

மதுரைநகர் தமிழ்ப்பயிரை மாண்புறவே வைப்பயிரை வளர்க்கும் மேலாம்
அதிபுகழ்சேர் பெருமுகிலே! அன்புறுபாண் டித்துரையாம் அதிபர் ஏறே!
புதுவைநகர் புனைபொன்னுச் சாமிஎழிற் பூபன்மகிழ் புதல்வ னாகிப்
பதியிலுயர் தென்பாண்டிப் பாலவனத் தப்பதியைப் பாலித் தோனே! (1)

உலகமெலா மீன்றளித்த உமையவட்கோர் உயிர்த்துணையா உவந்து வந்து
நிலவுமதி நெடுமரபின் தவம்விளங்க நீண்மகுடம் நேர்ந்து சூடிப்
பலவுயிரும் இன்பமுறப் பனிக்கவிகை தனைநிழற்றிப் பண்பார் செங்கோல்
இலகுறுநற் கரத்தேந்தும் இறைவனுறை எழில்பெற்ற நால வாயே. (2)

அவ்விறையும் ஆர்வமுடன் ஆய்தமிழ்ச்சங் கம்இருந்த அவ்வூரின்கண்
எவ்வமறு செவ்விபெறு சங்கமிலா திருங்குறையொன் றென்றும் நீங்கத்
திவ்வியநான் காஞ்சங்கம் நிறுவியதைத் திகழ்விக்கும் சிறப்புவாய்ந்தோய்!
இவ்வுலகு நீத்தகன்ற தென்னேயாம் நன்கறிய இசைத்தி டாயே! (3)

இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த மாதிஎலாம் இனிது தேர்ந்து,
வளமைமிகு கம்பரா மாயணநுட் பங்களெலாம் வயத்தே சேழில்
தெளிவுபெறப் பலர்மகிழப் பிரசங்கம் செய்திடுநற் றிறமை வாய்ந்த[தாயே!
'விளைபயிரின் இயல் முளையில் விளங்கு'மெனு முதுமொழியை மெய்ப்பித்த

அனந்தாழ்வான் எனுந்திருப்பேர் அமைந்தொளிர்முத் துச்சாமி ஐயங்கார்பால்
முனந்தமிழைக் கற்றுணர்ந்த முறையினையோர்ந் தன்னவனற மொய்ம்பார்
தினந்திகழ அவற்காசா னெனஅவனைச் "செந்தமிழ்"ஆ சிரியனாக்கிக் [மைந்தன்
கனந்திகழச் செய்துகுருக் கடன்தீர்த்தாய் நின்போல்வாரைக் கண்டிலமே.

தவமலிநன் மதுரையிலுறு கோர்ட்வக்கீ லாய்இனிது தமிழ்ச்சங் கத்தை
உவகையொடு நனிநடத்தும் உயர்ஸ்ரீநி வாசன்என ஓதும் மேலோன்
அவனிபுகழ் முகவையிலும் அணிதிகழ்எட் டயபுரத்து மார்சமஸ் தானக்
கவிஞர்களும். ராகவையங் கார்,வீரா சாமிஐயங் கார் இன்னோர்கள், (6)

அன்பாரு நின்னிடம்வண் டமிழ்பயின்றோர் எனஅறிந்தோம்;ஐயா!இன்னும்
நின்பார்வைக் கருணையினன் னிலையுற்றோர் தொகையாரே நிகழ்த்த வல்லார்?
என்போல்வார் எண்ணியநல் லெண்ணமெலாம் இனிதுநிறை வேற்றுவிக்கும்
பொன்போலுங் குணமுடையாய் பொருவில்பாண் டித்துரையாம் புலவரேறே.

"இருவேறிவ் வுலகத்தின் இயற்கை" இவை ஒன்றோடொன் றியைபில்லாத
"திருவேறு தெள்ளியரா தலுமவே"றென் றன்றுரைத்த தேவர் வாக்கிற்
கொருவேறு புறனடையாய் உற்றதொடும் ஈகையருள் ஒழுக்கம் ஆதிப்
பெருவேறு தன்மையொடும் பிறங்கியபாண் டித்துரையாம் பெற்றியோனே.

செருக்காரும் தருக்கசங்கி ரகம்அன்னம் பட்டீயம் செய்ய கல்விப்
பெருக்காளர் பேணுதிருக் குறட்பரிமே லழகருரை பெருமை வாய்ந்த

திருக்கோவையார்பேரா சிரியருரை சேர்த்தச்சேதுத் திருப் புராணமும்
விருப்பாலே ஆறுமுக நாவலர்கொண் டுரைதையன் வெளியிட்டாற் போல்,
தருபெரும்பேராசிரியன் சாமிநாதையன் முதலோர் தம்மைக் கொண்டு
புகழ்மணிமே கலைஉரை நற் புறப்பொருள்வெண் பாமாலை புனித வாய்மை
மிகுசிவஞா னச்சாமி பிரபந்தத் திரட்டாதி வெளியிட்டே நீ
"மகனறிவு தந்தையறி"வெனு மொழிகோர் இலக்கானாய்!மற்றிம்மட்டோ?

உந்ததபொன்னுச் சாமியிறை சந்திரசே கரக்கவிஞன் உதவி யாழ்மன்
சிந்தைமகிழ்வொடுதனிப்பாடற்றிரட்டோன்றே தொகுத்தான் செல்வனும்நீ
செந்தமிழ்ப்பன் னூற்றிரட்டும் திகழ்சைவ மஞ்சரியுந் திரட்டித் தந்து
"தந்தையினும் சதமடங்கு தநய"னெனத்தகு மொழியைத் தாபித்தாயே!

மதுரைமுக வையிற்பஜனை மடம்கிறுவி, உயர்சென்னை மாவாழ ஆரூர்
திதிசீர்குசே லம்தஞ்சை திருச்சிபுலி யூர்காஞ்சி நெல்லை யாதிக்
கதிதருவூர் களிற்பிரசங் கம்பொழிந்தாற் போற்பிரசங் கங்கள் செய்து
துதிபெறுசெந் தமிழ்ச்சைவம தனி தழையச் செய்பாண்டித்துரைப்பூமானே

மதுரையிற்கூ டியசென்னை மாநாணக் கூட்டம்தனி வயங்க மிக்க
நிதிஉதவி அதன்வரவேற் புச்சபையின் தலைமையினை நீயே பூண்டாய்!
முதமதுரைக் கல்லூரிக் குதவிநிதி அதைநடத்தி முதலை யென்னும்
பதியினிற்,பாண் டியன்லோயர் ஸெகின்டரிவித்யாசாலை பாலித்தாயே!

எனதருமை மாணவர்சேர் தமிழ்ச்சங்கப் போஷகரில் இலங்கி நின்று
தனமுதவி அதனருச்சினார்க்கினியர் நூல்நிலையம் தழைக்கச் செய்தாய்!
இனிய"தமிழ்மொழிவரலா" 'திராவியர்ப் புலவன்'அரங் கேற்றுங் காலும்
பிறும்விரும்பும் தொழும அவைக்குத் தலைமைவகித் தெனைப்பெருமை
{பெற்றச்செய் தாயே. (14)

"உக்கிரபாண்டியன்காலமதென்மதுரைத்தமிழ்ச்சங்கம்ஒழிந்த" தென்னும்
மிக்கவசை யறவொழித்தாய்; மேன்மைமிகுசங்கமொன்றவ் வியன்மூதூரில்
உக்கிரபாண் டியன்காலம் உதித்தோங்கி ஒளிர்ந்த" தென உலகுபோற்றத்
தக்கதுதிபெற்றுயர்ந்தாய்!தனிஎழிற்பாண்டித்துரையாம்தமிழ்க்கோமானே

பன்னரிய மாணவர்க்குச் சம்பளமும் பரீக்ஷைக்குப் பணமும் ஈந்தாய்!
மன்னுமறை யோர்பலர்க்கு மணமுடித்தாய்!வீடளித்தாய்! மற்றும் அன்போ
டன்னமிலார்க் கன்னமும்நல் ஆடையிலார்க் காடையுந்தந் தாதரித்தாய்!
இன்னின நீ செய்தையென எடுத்துரைக்க இவ்வுலகில் எவர்வல் லாரே?

நற்றமிழ்சை வப்பயிர்கை யற்றவர்கள் கற்றவர்கள் நலிந்துவாடச்
செற்றமறு நிற்குரிய பொற்புடைய கற்பிரசி திகைத்திரங்கச்
சுற்றமுநட் புற்றவரும் பற்றலரும் மற்றெவரும் சோகங்கூரக்
குற்றமறு பெற்றியுறு கொற்றவ!எங் குற்றனை நீ கூறாய் கூறாய். (17)

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்.இவர்வகுத்த 'இனிமையார்ந்த
திருமொழி'யை நன்குணர்ந்தோம். ஆதலினூற்பின்னுமுன 'திருத்தமுற்ற
ஒருமொழி'யும் அவர்பாலேயுற்றுணர்வோ.'.'எனநீவின் னுற்றாய்கொல்லோ
பெருமொழிசேர்தருநூலையாய்பேசுதிபாண்டித்துரையாம்பெருமையோனே

ஏற்றமிகு தாய்தந்தை எழில்மருக னுதியர்பால் ஏகினையோ?
போற்றுவிவே காநந்தன் தனைஅனுப்பி வேதாந்தப் பொருளை யெல்லாம்
மேற்றிசையோர் தமக்குதவு பாஸ்கரனைக்காண்பான்நீவிரைந்தாய்கொல்லோ
வேற்றுமையில் மெய்ந்நண்பன் வீர.லெ.சிந் நயன்பால்நீ மேவினையோ?(19)

வேண்டுமௌ வாங்கிலமு மேற்கலையுங் கற்றுணர்ந்தாய்! மேனாட்டாரும்
காண்டகுபல் ஜாலவகை கைதேர்ந்தாய்! கற்பமெனும் காலமவாழ
ஈண்டரிய ஜாலமெதும் பயின்றிலையே! இதுபயில வேதானோஇவ்
வாண்டினிற்கார்த் திகைமதியிற் பதினேழாம் நாள்சென்றாய்அறைகுவாயே.

பெருமகனே! மருவுபுகழ் மங்களசா மித்தேவப் பேராளன்றன்
மருமகனே! வண்டமிழ்நூல் வல்லோர்க்கும வறிஞருக்கும் மாரிபோன்று
தருமகனே! அன்பொருரு வாய்அமர்பாண் டித்துரையே! தயைமிக்கோனே!
ஒருமகனே உனக்குளனால் அவன்பொருட்டா யினும்நீஇங் குற்றிடாயோ?

உவந்திந்தத் தமிழுலகும் உயர்முதுநற் குரவர்களும் உளூற்று மேலாந
தவந்தந்த கானமுனையே! தனனிகாபாண் டித்துரையாம் தருமவானே!
நவந்தந்த நற்குல! "இன்னாசெய்தார் நாணிடநன் னயமேசெய்"வோய!
கவின்றந்த நின்முகத்தை யாஙகாண ஒருமுறை நீ காட்டாய்காட்டாய் (22)

கதமெனநற் றமிழ்விரும்பும் கன்தனவான் கனாகம்சவ கத்திற்கான
நிதிபெறவும் அதுதரவும் நிருபமனுப் பியஎங்கள் நிருபரேறே!
இதுகேழ்சின் னுட்கெல்லாம்இகமநீங்கிப்பரமுற்றதென்னே?நின்றன் [னே!
எதிர்வறியும் திறமையைஎன்னென்பேம்பாண் டித்துரையாம் இசைமிக்கோ

பொய்யா மொழிப்புலவன் புகன்றும்சாட் சியந்தந்தும் புகழ்மா றன்முன்
செய்யாத தென்மதுரைத் தமிழ்ச்சங்கத் தாபனம் நீ செய்தாய். மெய்யார்
ஐய! நான் "மறைகளினிந் தனைசைவ சிந்தனைகள்" ஆற்றுநெஞ்சத்
துய்யா! நின் நல்லிசையும் சகமுமபல் லூழி துலங்கிவாழி. (24)

உக்கிரபாண் டியன்சோம சுந்தரபாண் டியன்மகனா உதித்தான் என்பர்;
"தக்கதந்தை யேபுதல்வன் ஆவ"னெனும் வேதமொழி சாதமாக,
உக்கிரபாண் டியன்சோம சுந்தரபாண் டியற்றந்த உண்மை ஓர்ந்தோம்,
இக்குவல யத்திலிவன் சந்ததிஎன்றென்றும் கனி இலகி வாழி. (25)

ம. கோபாலகிருஷ்ணையர்.

மடாதிபதிகளும் பொதுஜனங்களும்.

நமது நாட்டில் இவ்வளவு காலமாக மடாதிபதிகளுக்கு ஏற்பட்ட மதிப்பும் செல்வாக்கும் இக்காலத்தவா தேடிக்கொண்டவையல்ல. பூர்வகாலத்தில் பொதுநன்மையின் பொருட்டு திரிகரண சுத்தியாகப்பாடுபட்டு அக்காலத்திற் றாறுமாறாய்க் கிடந்த நமது இந்து மதத்தை ஒரு வழிப்படுத்தியும் ஜனங்களைச் சன்மார்க்கத்தில் நிற்கச்செய்தும் பிறவும் செய்துவைத்த பேருபகாரிகளான மகான்களால் வந்தவைகளேயாம். இறறைக்கு எத்தனை நூற்றாண்டுகட்கு முன்னரோ இவ்வுபகாரம்பெற்ற நமது ஜனங்கள் அந்நன்றியைமறவாமல் அவ்வாதீனங்கட்கு யார் வந்தாலும் அவர்களிடத்துள்ள குற்றங்களை நோக்காது தங்கள் குலதெய்வமாக ஏற்றுக் கொண்டாடுகிறார்கள். இந்த உண்மையை இககாலதது மடாதிபதிகள் அறிந்து தங்கள் முன்னோர் வழிப்படி தங்களாலியன்ற நன்மைகளைப் பொதுஜனங்கட்குச் செய்யவேண்டுமென்ற எண்ணமின்றித் தங்கள் மடத்தில் இராஜபோகங்களை யனுபவிகக விரும்புகிறார்கள். ஒவ்வொரு மடாதிபதியையும் பற்றிய பிரஸ்தாபங்களைக் கேட்கும்போது ஆத்திரமாக இருக்கிறது. அவர்கள் உண்மைத்துறவிகளல்லரென்பது யாவருமறிந்ததால் சரீரசம்பந்தமான சௌக்கியங்களை அவர்களும் நம்மைப்போலநுபவிக்கட்டும். அதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. அதோடுபொதுவிஷயங்களையுங்கவனித்துவந்தாலென்ன? மடாதிபதிகள் என்று நாம் அவர்களைப் பெருமைபடுத்துவதெதற்கு? அவர்கள் சாப்பிடுகிற நல்ல சாப்பாட்டுக்கா? அல்லது வண்டியிலும பல்லக்கிலும் பட்டுத்திண்டில் சாய்ந்திருப்பதற்காகவா? அல்லது அவர்கட்கு முன்வரும் எடுபிடி பகற்றீவர்த்தி முதலிய டம்பங்கட்காகவா? இல்லையே. அவர்கள் பொதுஜனங்களின் நன்மைக்குப் பாடுபடுகிறவர்களென்று தானே மதிக்கிறோம். அதில்லை யானால் அவர்களைப்பற்றி நமக்கு நல்லெண்ணம் பெருகுமா? இன்னும் அவர்கள் ஞானவான்களாகித் துறவு பூண்டிருப்பது பெரிய அதிசயம். ஒரு மடாதிபதியின் ஸ்தானம் காலியாகுமானால் அந்த ஸ்தானத்தை எத்தனையோ ஆசையறறதுறவிகள் அபேட்சித்து நிற்கிறார்கள். தனவந்தர் வீட்டுக்குப்போக விரும்புகிற ஸ்வீகார புத்திரனுக்கும் இவர்கட்கும் பேதமுண்டா? இது என்ன ஞானம்? என்ன துறவு? அது எப்படியாவது போகட்டும். பொது ஜனங்கட்குபயோகமான

கல்விவிருத்தி, ஆசார சீர்திருத்தம் நல்லொழுக்கம், தெய்வபக்தி, முதலிய விஷயங்களைக் கவனித்து அவைகளை எந்த விதமாக முன்னுக்குக் கொண்டுவரலாமோ, அந்தவழியில முயன்று, தமிழ் வடமொழியான இருபாஷைகளையும் பழக்கச்செய்து, வித்துவான்களை யாதரித்து அடிககடி பலவிடங்கட்கும் யாத்திரைசெய்து ஆங்காங்கு சத்விஷயங்களைப் பிரசங்கித்து, இரவும் பகலும் பொது நன்மைகளைப்பற்றிய சிந்தித்துப் பாடுபட்டுவந்தால் அந்தோ! அதனாலுண்டாகும் நன்மைகள் அளவிடமுடியுமா? எவ்வளவு விரைவில் நமது நாடு அறிவு நிரம்பிய நாடாகிவிடும்! சாதாரணமாக ஒரு பிரபு ஒரு நாள் முழுதும் பிரசங்கித்தாலும் அதைப் பெரும்பாலும் ஜனங்கள் கருதி கவனிக்கமாட்டார்கள். ஆனல் ஒரு மடாதிபதி சிலவார்த்தைகளைப் பேசினாலும் அதைத் தெய்வ வாக்காக ஜனங்கள் நினைக்கிறார்கள். இது தொன்றுதொட்டுள்ள சுபாவமாக இருக்கிறது. இதினாற்றான் நாமும் மடாதிபதிகளைப்பற்றி அதிகமாக எழுதவேண்டியதாகிறது.

சில நாட்களுக்கு முன் நமது ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் கப்பலேறிய பிராமணர்களை ஜாதிபிரஷ்டம் செய்யும்படி ஸ்ரீமுகம் பிறப்பித்ததாகப் படித்திருக்கிறோம். பூரிகளும் சத்திரத்து சாப்பாட்டுக்கும தமது நித்திய கர்மானுஷ்டானங்களை விட்டுத் திரியும் போலிப் பிராமணர்களை யேன ஜாதிபரஷ்டம் செய்யக்கூடாது? பிராமணர்கள வெளி நாடுகட்குசசென்று ஏதாவது சம்பாத்தியம் பண்ணுமல் எக்காலமும் நிததிய தரிததிரர்களாக இருக்க வேண்டுமென்பது சுவாமிகட்குச் சம்மதம போலும். காலததுக்கேற்றபடி ஆசாரங்களை மாறறவேண்டியதன்றோ நியாயமாகும்? பிராமணர்களை வெளியேபோககூடாதென்று தடுததால் . அவர்களின் கஷ்ட ஜீவனத்தை நிவர்த்திப்பவா யாவர? நிற்க.

இக்காலத்து மடாதிபதிகள் தஙகள் பொறுப்பை யுணராமல் தங்கள் சௌகரியததுக்காகவே மடங்கள் ஏற்பட்டிருப்பதாக நினைந்து நிததிரை கொள்ளுகிறார்கள். இன்னும் சிலகாலமிப்படியிருப்பாராயின மடாதிபதிகள் என்ற பெயரையே நாம் காதாற் கேட்கமுடியாது. எல்லாம நமது காருண்ணியமுள்ள அரசாங்கத்தாரின் பார்வைக்குப்போய்த் திருத்தமடைந்து விடும் அப்படியாவது பொது ஜனங்கட்கு நன்மையுண்டாகட்டும்.

M. சின்னையா செட்டி,
மகிபாலன்பட்டி.

கண்டனூர் தனவைசிய சபை.

இவ்வூரிலுள்ள தனவைசியமக்களால் இவ்வாண்டில் நிறுவப்பெற்ற இச்சபை அந்தணர் சிலராலும் வைசிய மக்கள்பலராலும் மாதமொரு முறை கூடப்பெற்று பற்பல அரியபெரிய விஷயங்கள் உபந்யசிக்கப்பெற்று விருத்தியுற்றுவருதல் நம்மவர் பலருமறிவர். இதன்நோக்கம் பெரும்பான்மையும் தனவைசியமக்களுக்குக் கல்விகற்பிப்பதும் நல்விஷயங்களை உபந்யசிப்பதுமேயாம். இங்ஙனம் எடுத்தகாரியம் இனிது நிறைவேறுமாறு இறைவன்திருவருளால் தக்கமூலதனம் தொகுக்கப் பெற்றுவருகின்றது.

இம்மகாமதி 10உ மாலை 4 மணிக்கு ஸ்ரீமாந், தெ. அரு. சித. அருணாசலச்செட்டியாரவர்கள் பங்களாவில் இச்சபை கூட்டப்பெற்றது. அதில் ப்ரும்ம ஸ்ரீ வால்குடி, சுப்பிரமணியசாஸ்திரிகளே வழக்கப்படி அக்கிராசனம் வகித்தார்கள். ஸ்ரீமாந். மு. ரா. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் "கல்வியின்பயன்" என்ற விஷயத்தை யுபந்யசிக்கத் தொடங்கி எச்சாதியாராயினும் எம்மதத்தினராயினும் ஆண் பெண் யாவரும் கல்விகற்கவேண்டுமென்று ஆன்றோர் நூல்களினின்றுதக்க மேற்கோள்கள் காட்டி விரித்துக் கூறினார்கள். அப்போது சபாநாயக சாஸ்திரிகள் உபந்யாசத்தின் இடையிடையே உயர்ந்த ஜாதியாரும் அதிலும் ஆண்மக்களுமே கல்வியைக் கற்கவேண்டுமென்று தடுத்துக் கூறிக்கொண்டு வந்தனர். உபந்யாசிப்பவர் அவ்வப்பொழுதே தக்கஆதாரங்களுடன் தக்க சமாதானம்கூறி யுபந்யாசத்தை முடித்தார்கள்.

பின்னர் ஸ்ரீமாந் தெ. அரு. சித. இராமநாதஞ்செட்டியாரவர்கள் "கற்பு" என்னும விஷயத்தை மிகக இனிமையுடன் பிரசங்கித்தார்கள். அதிலும் மு. ராம சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கூறியவாறு பெண்கல்வி அவசியம்வேண்டுமென்பதை வற்புறுத்தினார்கள். சிலவரைஞ்செயதாரானவரும் மிகமகிழ்ந்து கரகோஷஞ்செய்தனர். மற்றும சிலஉபந்யாசங்களும் நன்கு நடந்தன.

முடிவில் சபாநாயகரவர்கள் முடிவுரையில் பெண்கல்வி வேண்டுமென்பது கொள்ளத்தக்கதன்றெனவும்; அதனால் கற்புககுக் கேடுவருமெனறும கல்விக்கு அகௌரமாம் என்றும கூறியதுடன் கல்விகற்ற பெணகள் கற்புக்கெட்டன ரென்றற்குச சில உதாரணமுங்கூறி முடித்தார்கள், அவர்கள் கூறிய உதாரணஙகளை யிஙகே யெழுதுவது அநுசிதமாதலின அதைத் தள்ளி மேற்செலவாம். பின்னர் தெ. அரு. சித. இராமநாதச்செட்டியாரவர்கள் பெண்கல்வி வேண்டுமெனபதற்குப் பின்னும் நியாயங்களையும், சபாநாயகர்கூறிய மறுப்புக்குத்தகக சமாதானஙகளையும் நன்குகூறிச் சபாநாயகருக்கும் சபைக்கும் வந்தன மளித்தனர், இம்மட்டில் சபை நிறைவேறியது.

இங்கே பத்திராதிபரவர்களையும் கிருபநேயர்களையும் யாம் ஒன்றுவேண்டுகின்றனம். அதாவது மேலேகண்டவாறு உபந்யாசகர்கள் பெண்கல்வி வேண்டுமெனவும், அக்கிராசனர் பெண்கல்வி கூடாதென்வும் அபிப்பி

ராய பேதப்பட்டன வாதலின் இவ்விருதிறத்தாருள் யார் கூறுவது ஒள்ளிதாதற்கதென்பதை இப் பாதுவாயிலாகவெளியிட வேண்டுமென்பதே.

இங்ஙனம்,

கண்டனூர்வாசி

குறிப்பு. ஆண்பெண் இருபாலார்க்கும் கல்வி அவசியம வேண்டியதேயாம். கல்விக்கு அதிதேவதையாகிய சரஸ்வதியே பெண்வகுப்பிலிருப்பதும், ஔவைப்பிராட்டியார் முதலிய பலபெண்மணிகள் கற்றுத்தேர்ந்து பண்டைககாலத்து விளங்கினரென்பதும உலகப்பிரசித்தம். கல்வி கற்பைககெடுக்குமென்பது சிறிதும பொருந்தாது. விளக்கு இருளைநீக்கி ஒளியைக்கொடுப்பதற்கேயுரியது. பேதைமக்கள் யாராவது அவ்விளககால் வீட்டைக்கொளுத்திவிடின அதுபற்றி "விளக்கு வீட்டையெரிப்பதுதான் வீட்டுக்கு விளககுக் கெடுதியெயசெய்யும், வீட்டில விளககுவைத்தலே கூடாது" என்றுகூறுவதும் கல்வி கற்பைக்கெடுக்கும என்று கூறுவதும் ஒன்றுதான. ஒருகுழந்தைபால்குடிககையில் புரையேறி யிறந்ததென்றால் பால் குழந்தையைக கொல்வது என்றுகூறலாமோ. இவவுரை சிறிதும் பொருந்தாது. நமதுதேசம் முன்னுக்கு வரவேண்டுமாயின் நமதுபெண்களெல்லாம அவசியம் கற்கவே வேணடும் 'எககுடிப்பிறப்பினும் யாவரேயாயினும் கற்கைநன்றே கற்கைநன்றே" எனபதைக்கூறி நிறுத்துதும். சமையமவாய்ப்பழி பெண்கல்வி என்ற தலைப்பெயரிட்டு ஒரு வியாசம் நமதுபானுவில் பிரசுரிப்பாம.

புத்திராதிபர்.

புத்தகக் குறிப்பு.

திருத்தொண்டர்மாலை. இது-ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச்செய்த திருத்தொண்டத்தொகை என்னும திருப்பதிகத்துள் வீற்றிருந்தருளும் நாயன்மார்களின அற்புதசசரித்திரஙகளை முறையாக முதலிரண்டடியிலும் அதறகேற்றவாறு திருக்குறள் வெண்பாக்களைப் பின்னிரண்டடியினும் பொருத்தியாக்கப்பட்ட 100 வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு கவியும் இனிமையும் பக்தியும பொருநதியுள்ளது. இநநூலாசிரியர் குமரபாரதியார்என்று இதன் சிறபபுப்பாயிரவெண்பாவால் தெரிவதன்றி வேறு விஷயஙகள் தெரிந்தில.: பழைய ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்தெழுதி சென்னை வித்துவான் ஸ்ரீமத வா. மகாதேவமுதலியாரவர்களைக் கொண்டு தெள்ளிய குறிப்புரையும் எழுதச்செய்து தேவிகோட்டை மீனலோசனி அச்சியந்திரசாலையில் அழகாக அச்சிடுவித்த மகோபகாரி ஸ்ரீமாந், மெ. அரு. நா. இராமநாதச்செட்டியாரவர்களே. இவர்களது அரும்பெருககுணங்கள் யாவும உலகப்பிரசித்த முற்றனவாதலின் இங்குவிரிக்கவில்லை இந்நூல் வெளிவரும விஷயத்தில் தேவிகோட்டை ஸ்ரீமாந் வயி: மு. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் பெரிதும் சிரத்தை பாராட்டி யிருக்கின்றார்கள். சிவநேயத்திற் சிறந்த இவர்கள் நீடூழ்க.

பத்திராதிபர்

சமாசாரக்கொத்து.

சௌக்கியமடைந்துவருகிறார்:—மேலைச்சிவப்பட்டிச் சன்மார்க்க சபை ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியும், சிவநேயச்செல்வரும், செந்தமிழபிமானரும், பரோபகாரியும் ஆகிய ஸ்ரீமாந் வ: பழ. சா. பழநியப்பசெட்டியாரவர்கள் 3 வாரமாக வியாதியால் வருத்தமுற்று இப்போது சௌக்கியமடைந்து வருகிறார்களெனத் தெரிந்து மிகக மகிழ்ச்சியடைகிறோம். இவர்கள் பிணியுற்றிருப்பதறிந்து நாமும் பல வித்துவான்களுடன் சென்று பார்த்தோம். அப்போது கனம் செட்டியாரவர்கள் சிறிதும் மனங்கலங்காது தேவாரம் திருவாசகம் அருட்பா முதலியவற்றைச் சிரவணஞ்செய்து பரமகருணாநிதியாகிய சிவபிரான் திருவடித்தாமரைகளையே சிந்தித்துக்கொண்டு அந்நிலையிலும் வித்துவான்களை அருமைபாராட்டிய அரும்பெருங்குணங்களை நினைக்குந்தோறும் ஆச்சரியமடைகிறோம். அவர்கள் அரோக திடகாத்திரராக வாழும்படி சிக்கலம்பதியிற்றிருக்கோயில் கொண்டருளும் முருகக்கடவுள்மீது பாமாலைசாத்திப் பணிந்து மீண்டுவந்தோம். செட்டியாரவர்கள் பல்லாண்டு சுகஜீவியாக வாழும்படி முருகக்கடவுள் அருள் புரிக.

* * *

40 லட்சம ரூபாய்க்கு அதிகமான பஞ்சு அமெரிக்காவில் உள்ள ஹவுஸ்டன் வர்த்தகசாலையில் தீக்கு இரையாயிற்று.

* * *

சென்னை கவர்னராகிய லார்ட் கார்மிகேலை வங்காளத்துக்கு மாற்றிவிட்டது நமது ராஜதானியின் துரதிர்ஷ்டமே. நமது பழைய அரசர்கள் போன்று மாறு வேடம் பூண்டு தனியாய் நகரிலுள்ள பல பாகங்கட்கும சென்று குடிகளின் உண்மையான நிலையைக் கண்டறிய அதிபிரயாசைப் பட்டு வந்த இவரது மாற்றம் அநேகருக்கு ஏமாற்றத்தையும் துக்கத்தையும் விளைவித்திருக்கின்றபடியால் இந்த ராஜதானியிலுள்ளோர் ஆங்காங்கு பொதுக் கூட்டங்கள் கூடி அவரை மாற்றக்கூடாதென்று கவர்ன்மெண்டாருக்கு மனுச செய்து வருகின்றனர். இவருடைய ஸ்தானத்தில் லார்ட் பெண்ட் லண்ட் என்பவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். ஆயினும் அவர் வருகிறதற்கு நாலைந்து மாதங்களாகுமென்றும் அவர் வரும்வரை எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பராகிய மிஸ்டர் ஹாமிக் கவர்னர் வேலை பார்த்து வருவாரென்றும் தெரிகிறது.

சமாசாரக்கொத்து.

ஒரு ஜமீந்தாரின் பரிதாபக் கொலை:—திருச்செங்கோட்டுக்குச் சமீபத்தில் 8 மைலிலுள்ள குமாரமங்கலம் கவுண்டன்பாளையம் மிட்டா ஜமீன்தார் C. கைலாச கவுண்டர், சுமார் 22 வயதுள்ள வாலிபர், தம் மாளிகையிலுள், சென்ற 10௳தேதி இராத்திரி 8, 9 மணிசுமாருக்கு பந்துக்களிருவருடனிருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது சில பாதகர்கள் கொல்லை வழியே உட்புகுந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த அவ்வாலிப ஜமீன்தாரை தூக்கிக்கொண்டு போய் அடித்துக் கழுத்தில் கயிற்றைக்கட்டி பரபரவென்றிழுத்துச்சென்று சித்திரவதை செய்து கொன்று அடுத்தாற்போல ஒரு காட்டில் எறிந்துவிட்டுப் போய்விட்டார்களாம். இதுசம்பந்தமாய், கொலையுண்டவரின் சுவீகார தாயார் பிரதான வேலைக்காரன ஜமீந்தாரின் அடுத்துள்ள வாரீசு மற்றொரு ஜமீந்தார் இன்னும் சில ஆட்கள் ஆகிய இவர்களை அரஸ்டுசெய்திருக்கிறார்களாம்.

* * *

பேசுகிறநாய்:—ஜெர்மனிதேசத்தில் ஹெர் எடர்ஸ்(Her Ebers) என்னுமொரு பிரபுவினால் வளர்க்கப் பட்டுவருகிற டான (Don) என்னும் நாய் மனிதரைப் போலவே தனக்குக் கற்றுக் கொடுக்கிற சொற்களை உச்சரிக்கிறதாம். அதைப் பரிசோதிக்கும் பொருட்டுச் சில ஜந்து வைத்திய சாஸ்திரிகளும் மனோதத்துவ சாஸ்திரிகளும் போயிருந்தார்கள். அப்பொழுது அந்த நாய் "பசி," "ஆம்," "இல்லை," "அடை," "வேண்டும்" முதலான பல சொற்களுக்குச் சரியான ஜெர்மனிப் பாஷைப் பதங்களை வெகு நன்றாய் உச்சரித்தது. அந்த சாஸ்திரிகள் அந்த நாயை இன்னும் கவனித்து அதன் விநோதத்தைப் பற்றி விரிவாய் எழுதுவதாகக் கூறியிருக்கிறார்கள்.

* * *

காலஞ்சென்ற ஆனரபில் ஸ்ரீவே. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் B.A., B.L., C.S.I. யின் ஸ்தானத்தில் ஆனரபில் மிஸ்டர் P.S. சிவசாமி ஐயர் B.A. B.L. C.I.E. அவர்கள் கவுன்ஸில் மெம்பராக நியமிக்கப் பட்டார். மிஸ்டர் நேப்பியரை மிஸ்டர் சிவசாமி ஐயரின் ஸ்தானத்தில அட்வோகேட் ஜெனரலாக நியமித்திருக்கிறார்கள.

* * *

திருச்சூரில், கோவில் பொக்கிஷப்பெட்டி உடைக்கப்பட்டது:- கொச்சி தாபாருடைய மேற்பார்வையிலுள்ள கோவில் ஒன்றில் ஊழியஞ் செய்துவரும் காவற்காரன் ஒருவன் 22௳தேதி இரவில் கோவில பொக்கிஷப்பெட்டியை உடைத்துத் திறந்து, அதிலுள்ள பணத்தைக் கொள்ளை கொண்டுபோக இருந்த தருணத்தில், மற்றொரு காவற்காரன கோவில் பொக்கிஷப்பெட்டி உடைக்கப்பட்டுத் திறந்த வண்ணமாக இருந்ததைக்கண்டு நடுநடுங்கி கூக்குரலிட்டான். ஜனங்கள் ஓடிவந்து திருடனைக் கைப்பிடியாகப்பிடித்து, அவனை போலீசார் வசம் ஒப்புவிக்க, அவர்கள் அவனை அரெஸ்டு செய்திருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ காசி.

பட்டு பீதாம்பரக் காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

முழம்	அகலம்	1-க்கு கூ		முழம்	அகலம்	1-க்கு	கூ
5	2½	6முதல்	8	7	3	10 முதல்	13
5	3	7	9	8	3	12	15
6	2	8	9½	9	3	14	16
6	3	9	13	10	3	15	18

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வாயிவர் கயிறு:

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

விலாசம்: மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City.